ஓயாத அலைகள் 3

# ஆனையிறவும் பெருவெற்றி

களத்தில்

(15-05-2000) (208)

சிறப்பிதழ்

## 25வது ஆண்டில் தமிழர் சேனை



விடுதலையின் ஊற்றுக்கண்

கையில் ஒரு துப்பாக்கி.
எண்ணிச் சில தோழர்.
நெஞ்சில் விடுதலையின் தீ.
நிமிர்ந்து நேர்நோக்கும் விழியில்
விலங்குடைக்கும் ஆவல்.
கூனல் நிமிர்த்தி
விடுதலைப்
பிரவாகமெடுத்துநிற்கும்
ஓர் இனத்தின்...
விடுதலையின் ஊற்றுக்கண்.



ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிப்பது ஆட்பலமோ – ஆயுத பலமோ அல்ல: அசைக்க முடியாத மனவுறுதியும், வீரமும், விடுதலைப்பற்றுமே வெற்றியை நிர்ணயிக்கும் குணாம்சங்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

## மீண்டும் யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளிடம்

**ஆனையிறவுப் பெருந்தள அழிப்புடன், குடாநாட்டுக்கான பாதையைத் திறந்துகொண்டு, விடுதலைப் புலிகளின் படையணிகள், யாழ் குடாநாட்டுக்குள் நன்கு முன்னேறியுள்ளன. ஆச்சரியப்படவைக்கின்ற விடுதலைப் புலிகளின் நகர்வு வேகம், இப்பத்திரிகை வெளிவருவதற்கிடையில், யாழ்ப்பாணத்தை மீட்டு, வெற்றிக்கொடியை ஏற்றிவைத்தாலும் வியப்பதற்கு இடமில்லை.**

ஆனையிறவில் இருந்து படையினர் வாபஸ் வாங்கப்படமாட்டார்கள் என, ஏப்பிரல் முதல்வாரம் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா மிகவும் உறுதியாக அறிவித்தார். அவர் அறிவித்து, மூன்று வாரத்தில், விடுதலைப் புலிகள் ஆனையிறவுப் பெருந்தளத்தை, உக்கிரமான தாக்குதலைத் தொடுத்து சிதைத்து அழித்தனர். இந்த வரலாற்றுப் பெருந்தோல்வியை மறைக்க, வார்த்தை தேடி அலைந்து அதிலும் தோற்றுப்போய், 'தந்திரோபாயமான பின்வாங்கல்' என, அதனை சிறீலங்கா அரசு அழைத்துக்கொண்டது.

'தந்திரோபாயமான பின்வாங்கலை' மேற்கொண்ட சிறீலங்காஅரசோ, தற்போது நாட்டில் யுத்த சூழ்நிலையை அறிவித்துள்ளது. புனர்வாழ்வு புனர்நிர்மாணப் பணிகள், மூன்று மாதத்திற்கு நிறுத்தப்பட்டு, அனைத்துப் பொருளாதாரமும் யுத்தத்தின் தேவைக்காக திருப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களோ தமது ஒரு மாதச் சம்பளத்தை, யுத்தத்திற்காக வழங்க மனதார முன்வந்துள்ளனர். புதிய அடக்குமுறைச் சட்டங்கள் அமுலுக்கு வந்துள்ளன.

எங்கும் யுத்தம் பற்றியே பேச்சு. விடுதலைப் புலிகளை எப்படியும் வெற்றிகொண்டாக வேண்டும் என்ற கூச்சல்களே கேட்கின்றன.

புத்தமதத்துறவிகளும், பேரினவாதிகளும் சந்திரிகா நாட்டில் யுத்தநிலை பிரகடனப்படுத்தியது குறித்து மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். காலம்கடந்த நடவடிக்கை என்றாலும், மகிழ்ச்சிகொள்வதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

வெளிநாட்டு மத்தியத்துவங்களும் தலையீடுகளும் கூடவே கூடாதென்று வலியுறுத்திவந்த பேரினவாதிகள், விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள வெளிநாடுகளின் உதவியை அரசு நாடவேண்டும் என நெருக்கடி கொடுக்கின்றன.

செய்தித் தணிக்கை மேலும் இறுக்கப்பட்டிருக்கின்றது. கொழும்புப் பத்திரிகைகள், 'தணிக்கை' 'தணிக்கை' என்று தழும்புகள் தாங்கி வெளிவருகின்றன.

உண்மையில், செய்தித்தணிக்கையும், அடக்குமுறைச் சட்டங்களும், புனர்வாழ்வுப் பணிகள் நிறுத்தப்பட்டு, போருக்கு மேலும் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதும், சந்திரிகா தனது ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ளவே என்பதை, சிங்கள மக்கள் புரியாமல் இருப்பதாகவே படுகின்றது.


யுத்தத்தோல்வி தனது தேர்தல் தோல்விக்கு வழிவகுத்துவிடும் என அஞ்சும் சந்திரிகா அரசு, அடிக்குமேல் அடிவாங்கி நொந்துபோய் இருந்தாலும், போர்ப்பிரகடனம் செய்து சிங்களத்தை சாவின் எல்லைவரை தள்ளிச் செல்லவே பிரியப்படுகின்றார்.

அதனால், போர்க்கூப்பாடுபோட்டு, சிங்களத்தை ஒத்துக்குரல்கொடுக்க வைத்திருக்கின்றார். எதிர்ப்புக் குரல்களையும், அரசுக்கு எதிரான போராட்டங்களையும் தடுக்க, பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரில், அடக்குமுறைச் சட்டங்களை அறிமுகப்படுத்தியிருக்கின்றார்.

இராணுவச் சமநிலை விடுதலைப் புலிகளின் பக்கம் சார்ந்திருக்கையில், விடுதலைப் புலிகளின் கை ஓங்கி, சிங்களத்தின் மனோநிலை சிதைந்திருக்கையில், சமாதானப்பேச்சுவார்த்தை என்பது, சந்திரிகாவின் அரசியல் வாழ்க்கையின் தற்கொலைக்கு ஒப்பானது. ஆக.. தேர்தல்வரை இந்தப் போர்க்கோசம் தொடரவே செய்யும். அதுவரை சிங்களம் எத்தனையோ அவலங்களையும் அவமானங்களையும் சந்திக்கப் போகின்றது.

விடுதலைப் புலிகளோ நிதானமாக, தமிழ் மக்களின் விடுதலைக்குப் பாதையமைத்துக் கொண்டிருக்க, சந்திரிகாவோ ஆவேசமாக யுத்தப்பாதையில் நாட்டை இட்டு, சிங்களத்தை அழிவுநோக்கி அழைத்துச் செல்கின்றார். ■

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**



# சிங்களம் ஒரு அடி பாய்ந்தால் புலிகள் ஒன்பது அடி பாய்கின்றனர்

இருநூற்றி ஐம்பத்தொன்பது சதுரக்கிலோ மீற்றர் பரப்பில், முகாம்கள், மினிமுகாம்கள், பாதுகாப்பரண்கள், தளங்கள், தளத் தொகுதிகள் என, ஒரு பலம் வாய்ந்த கடுமையான பாதுகாப்புக் கட்டமைப்பைக் கொண்ட பெரும் இராணுவத்தளம் மட்டும்தானா ஆனையிறவு..?

இல்லை என்பதைத்தான் தற்போது நடைபெறும் சம்பவங்கள் எடுத்துச் சொல்லுகின்றன.

இலங்கைத் தீவில், எங்கோ ஒரு மூலையில், யாழ் குடாநாட்டில், தமிழ்மக்களின் பிரதேசத்தை துண்டாடி, அதன் குரல் வளையை நசிக்கிப் பிடிக்குமாப்போல் அமைந்திருத்ததுதான் ஆனையிறவு என்பதெல்லாம் குறைந்த மதிப்பீடு.

இன்று, ஆனையிறவுத் தளம் விடுதலைப் புலிகளால் வெற்றிகொள்ளப்பட்டுள்ளதன் பின்னால், தமிழீழத்திலும் சிறீலங்காவிலும் மட்டும் அதன் எதிரொலி கேட்கவில்லை. தென்னாசியப் பிராந்தியத்துடன் மட்டும் அது நின்றுவிடவில்லை. உலகின் மற்றைய பகுதிகளிலும் ஆனையிறவு வீழ்ச்சியின் எதிரொலி கேட்கவே செய்துள்ளது. சிங்களத்தின் அவல ஓசை அதன் நட்பு நாடுகளின் செவிகளில் ஈயத்தைக் காச்சி ஊற்றின.

அயல் நாடுகளிலும் அது தன் தாக்கத்தை ஏற்படுத்தியது.

விற்பனைக்கு வந்துவிட்ட பண்டப்பொருளை, குறைந்த விலைகொடுத்து வாங்கத்துடிக்கின்ற வியாபாரிகள்போல, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த சில நாடுகள் துடித்தன.

இறைமையுள்ள தமது நாடு, தன் ஒருபகுதி நிலத்தை, அன்னியனுக்கு, அதாவது விடுதலைப் புலிகளுக்கு விட்டுவிடச் சம்மதிக்காது என, அண்மையில்தான் உலகச் செய்திநிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்த கதிர்காமரோ, முழுமையாகவே சிறீலங்காவை விற்பதற்காக நாடுநாடாக அலைந்தார்.

சிறீலங்காவின் நிலையை எண்ணி வெளியரங்கமாக கவலை வெளியிட்ட ஆயுத வியாபாரிகளுக்கோ உள்ளூர மகிழ்ச்சி. விடுதலைப் புலிகள் அள்ளி எடுத்த ஆயுதங்களுக்கும், அழியுண்டு போனவைகளுக்கும் ஈடாக ஆயுதங்களை விற்றுத்தீர்த்துவிடலாம் என்று அவை உள்ளூர மகிழ்ச்சிகொண்டன.

சிறீலங்காவின் கையாலாகாத நிலைகண்டு, எங்கே தமது எதிரிகள் உதவி வழங்குவதென்ற போர்வையில் சிறீலங்காவில் கால்பதித்துவிடுவார்களோ என்ற ஏக்கம் தவிப்பு சில நாடுகளுக்கு.

ஆனையிறவு வீழ்ச்சி அதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் யாழ் மீட்சி.. இப்படியே, சுதந்திர தமிழீழத்திற்கான காலம் நெருங்குவதைக் கண்டு, உள்நாட்டில் தேசியப் பிரச்சினைகளால் சிக்குண்டு தவிக்கும் சில நாடுகளும், எங்கே விடுதலைப் புலிகளின் இந்த வெற்றி, அங்கே தத்தமது நாடுகளில் எதிரொலிக்குமோ என்று தேவையற்று பயம்கொண்டன.

இப்படியாக ஆனையிறவில் சிங்களம் எழுப்பிய அவலக்கூக்குரல், உலகமெங்கும் எதிரொலித்தது.

இந்த சூழ்நிலையைப் பாவித்து, சிறீலங்காஅரசு, ஒரு இராஜதந்திர நகர்வை மேற்கொண்டது. குடாநாட்டில் விடுதலைப் புலிகளிடம் சிக்குண்டுள்ள படையினரின் பாதுகாப்பான வெளியேற்றத்திற்கு உதவுங்கள் எனக்கூறி உலகநாடுகளிடம் வேண்டுகோள்விடுத்தது. நாற்பதினாயிரம் படையினர் புலிகளின் கைகளில் சிக்கி, கொல்லப்பட்டுவிடுவர் என, அது அழுது தீர்த்தது. யாழ் குடாநாட்டில் சிக்குண்டுள்ள படையினருக்கு மனிதாபிமான உதவி தேவை என அது வரம் கேட்டது. அல்லது உயிர்ப்பிச்சை கேட்டது.

சிங்கள ஆக்கிரமிப்புப் படை, 1995ஆம் ஆண்டு யாழ் குடாநாட்டை ஆக்கிரமிக்க, பெரும் படை நடத்துகையை மேற்கொண்டபோது, பெரும் அழிவுகளை, துன்பங்களைச் சந்தித்து, ஒரே இரவில் ஐந்து இலட்சம் மக்கள் குடாநாட்டை விட்டுச்சென்ற காலங்கள் இன்று நினைவுக்கு வருகின்றன. அந்தத் துன்பமான வலி, இன்னமும் நெஞ்சங்களில்.

கைக்குழந்தைகள், வயோதிபர்கள், நோயாளிகள், கர்ப்பிணிகள், சிறுவர் சிறுமியர் என.. ஒரு தேசம் தன் வேர்களை இழுத்துக்கொண்டு புறப்பட்டுச் சென்ற கொடுமையான கணங்கள் நினைவுகளில்.

கையில் அகப்பட்ட பொருட்களுடன், எங்கே போகின்றோம் என்று தெரியாமல், அடுத்தவேளைக்கு என்ன வழியென்றே புரியாமல் எம்மினம் கால் போன திக்கில் நடந்தது. ஒரு மாபெரும் மனிதஅவலம் அன்று பதிவாகியது.

வீரிட்டுக் கத்தும் குழந்தைகளுக்கு உணவில்லை. சாவுக்கும் வாழ்வுக்கும் இடையில் ஊசலாடிய நோயாளிகளுக்கு மருந்தில்லை. பசி.. தாகம் வாட்ட, நடைப்பிணங்களாக, ஒரு தேசமே இடம்பெயர்ந்து சென்ற அவலத்தை விபரிக்க வார்த்தைகள் ஏது.

இது நடந்து சரியாக ஐந்து ஆண்டுகள். நிலைமை தலைகீழாக மாறியுள்ளது.

புலிச்சேனை பாய்ந்து விரைய, சிங்களப்படை பின்வாங்கி ஓடுகின்றது. இன்று சிங்களத்தின் இராணுவ அரசியல் கனவுகள் தவிடுபொடியாகிவிட்டன.

தமிழ்மக்கள் அன்று அனுபவித்த இந்தக் கொடுமையை, கண்கொண்டு பார்க்காத, காதுகொண்டு கேட்காத மனிதஉரிமை, மனிதாபிமான ஜாம்பவான்கள் இன்று, சிறீலங்கா இராணுவத்திற்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிசெய்ய முன்வருவதாக அறிவித்தமை தமிழ்மக்களைப் பொறுத்தவரை பெரும் புரியாத புதிராகவே இருக்கின்றது. சிங்கள இராணுவத்தைக் காப்பாற்ற அவை துடித்த துடிப்பும் எம்மக்கள் மத்தியில், பெரும் புதிர் நிறைந்த கேள்வியாக முன்நிற்கின்றது.

சிங்கள இராணுவத்தைக் கொல்வது விடுதலைப் புலிகளினதோ, தமிழ்மக்களினதோ இலக்காக, திட்டமாக இருக்கவில்லை. அவர்களின் இலக்கு, தாகம் என்பதெல்லாம் விடுதலை மட்டுமே. யாழ்குடாவில் சிக்குண்டுள்ள நாற்பதினாயிரம் படையினருக்கும் சாவை அழிப்பதுதான் விடுதலைப் புலிகளின் நோக்கமல்ல. தமது ஆக்கிரமிப்பை கைவிட்டு, தமது தாய் நாட்டுக்கே திரும்பிச் செல்ல சிங்களப்படையினர் தயாராக இருந்தால், விடுதலைப் புலிகள் அதனைத் தாராளமனதோடு அனுமதிப்பர் என்பதில் சந்தேகமில்லை.

இதனை, சிறீலங்காவிற்கும், யாழில் சிக்குண்டுள்ள இராணுவத்திற்கு 'மனிதாபிமான உதவிகள்' செய்ய விழைந்த நாடுகளுக்கும் தெளிவுபடுத்துமாப்போல், விடுதலைப் புலிகள், சிங்கள இராணுவம் யாழ் குடாநாட்டை விட்டு வெளியேறிச் செல்ல வசதியாக போர்நிறுத்தம் செய்ய தயாராக இருப்பதாக அறிவித்தனர்.

இந்த அறிவித்தல், சிறீலங்காவின் சூழ்ச்சித் திட்டத்தை நன்கு வெளிக்காட்ட வைத்துவிட்டது.

இராணுவத்தைக் காப்பாற்ற உதவுங்கள் என உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்த சந்திரிகாவோ, விடுதலைப் புலிகளின் போர்நிறுத்தம் தொடர்பான அறிவித்தலை நிராகரித்தார்.

ஒரு இராணுவத்தினன் உயிரோடு இருக்கும் வரையும் யாழ் குடாநாட்டை விடுதலைப் புலிகளிடம் விட்டுக்கொடுக்கப்போவதில்லை என, அவர் சூழுரைத்துள்ளார். இது, யாழ் குடாநாட்டில் சிக்குண்டுள்ள படையினருக்கு 'மனிதாபிமான உதவிகள்' செய்யப்போவதாக அறிவித்த நாடுகளின் முகங்களிலும் கரிபூசவைத்துள்ளது.

யாழ் குடாநாட்டில் உள்ள நாற்பதினாயிரம் சிங்களப்படையினரையும், உயிரோடு, மரியாதையுடன் அனுப்பிவைக்க விடுதலைப் புலிகள் தயாராக இருந்தாலும், யாழ் குடாநாட்டில் இருந்து ஒரு இராணுவத்தினனையும் உயிரோடு ஏற்பதில்லை என்ற தீவிரமான உறுதியோடு சந்திரிகா இருப்பது போல் தெரிகின்றது. ■

# இராஜதந்திரத் தளத்திலும் சிறீலங்காவிற்கு அடுத்தடுத்து தோல்விகள்

## சர்வதேச அரங்கில் இருந்து விலக்கப்படும் சிறீலங்கா

தமிழீழ மண்ணில், சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்புக் கனவு நொறுக்கப்பட்டுவரும் வேளை இது. அதன் இராணுவ இயந்திரம் நிலைகுலைந்து, அதன் கட்டமைப்புச் சிதைந்து, முழுமையான அழிவு நோக்கி அது சென்றுகொண்டிருக்கின்றது. சிங்களப் படையினர், விடுதலைப் புலிகளிடம் அடிக்குமேல் அடிவாங்கி எழும்பமுடியாத நிலைக்குச் சென்றுவிட்டனர் என்பது சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை.

தமிழீழ மண்ணை ஆக்கிரமித்திருக்கின்ற சிங்களப்படைக்குத்தான் இந்த அவமானகரமான அவலநிலை என்பதல்ல, சிங்கள அரசின் இராஜதந்திர நகர்வுகளுக்கும் தோல்விக்குமேல் தோல்வி.

சிங்கள அரசின் மனித உரிமை மீறல்கள், இனஅடக்குமுறைக் கொடுமைகள், உலக அரங்கில் எதிரொலிக்க ஆரம்பித்திருக்கின்றது. எத்தனை நாட்களுக்குத்தான் அவலமான உண்மையை குழிதோண்டிப் புதைத்துவிட்டு, அரிதாரம் பூசிக்கொண்டு மனித உரிமை குறித்துப் பேச மேடைஏறுவது..?

தமிழர்மீதான சிறீலங்காவின் மனித உரிமை மீறல்களின் எதிரொலி, சர்வதேச அரங்கில் வெளிப்பட்டிருக்கின்றது. இதன் விளைவால், சர்வதேச அரங்கில் இருந்து சிறீலங்காஅரசு ஓரங்கட்டப்பட்டிருக்கின்றது. தமிழ்மக்கள் மீது சிறீலங்கா அரசு மேற்கொண்டுவரும் இந்தக் கொடுமைகள் வெளிப்பட ஆரம்பித்திருப்பதால், பல சர்வதேச அமைப்புக்களில் இருந்தும், ஐ.நா. அமைப்புக்களில் இருந்தும் சிறீலங்கா ஓரங்கட்டப்பட்டிருக்கின்றது. மேற்படி அமைப்புக்களில், சிறீலங்காவின் அங்கத்துவத்தை சர்வதேச சமூகம் நிராகரித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில், தீர்மானங்களை இயற்றும் அதிகாரம் பெற்ற 53நாடுகளைக் கொண்ட துணைக்குழுவில் அங்கத்துவம் வகித்துவந்த சிறீலங்கா அரசு, கடந்த மாதம் தனது அங்கத்துவத்தை இழந்துள்ளது.

இதேபோன்று, கடந்த நவம்பர் மாதம், யுனெஸ்கோ(UNESCO) தலைமைத்துவத்திற்கு போட்டியிட்ட சிறீலங்கா, இரண்டே இரண்டு வாக்குகளை மட்டும் பெற்று படுதோல்வியடைந்துள்ளது.

இத்துடன் நின்றுவிடவில்லை சிறீலங்காவின் இராஜதந்திரத் தோல்விகள்.

உலக நீதிமன்றத்தில், முன்பு அங்கத்துவம் வகித்துவந்த சிறீலங்காவின் பிரதிநிதி, கடந்த ஆண்டு தனது பிரதிநிதித்துவத்தை இழந்துள்ளார்.

இதேவேளை, பொதுநலவாய நாடுகளில் ஒன்றான சிறீலங்கா, தனது மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் உச்ச நிலையை அடைந்திருப்பதால், பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இருந்து சிறீலங்காவை விலக்கி வைக்கவேண்டும் என்று பல நாடுகளும் கோரிவருகின்றன.

'சமாதானத்திற்கான போரை..(?)' நடத்திவரும் சந்திரிகா அரசுமீதான சர்வதேச சமூகத்தின் பார்வையும், அதன் பதில்கள் இவ்வாறு அமைகின்றன. ■

**AUSTRALIA**
TCC
P O Box 375,
Preston,
Victoria 3072.

**CANADA**
WTM
64 Eaton Avenue,
Toronto,
Ontario M4J 2Z5.

**DENMARK**
LTTE
P.O.Box 47,
7400 Herning.

**FRANCE**
TCC
341 Rue Des
Pyrenees,
75020 Paris.

**GERMANY**
TCC
Postfach 101613,
46016 Oberhaousen.

**ITALY**
TCC
Via Paolo Balsamo-11
90100 Palermo.

**NETHERLANDS**
TCC
P.O.Box 18600,
2502 EP Den Haag.

**NORWAY**
TCC
P.O.BOX 1699 Vika,
0110 Oslo.

**SWITZERLAND**
WTTC
Joses Str - 110,
8005 Zurich.

**SWEDEN**
TCC
Glomminge Grand-25,
3rd Floor,
16362 Spanga.

**UNITED KINGDOM**
UTO
Eelam House,
202 Long Lane,
London SE1 4QB.

**U.S.A**
W.T.C.C
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica
New York 11432.

# ஆனையிறவு அதிர்வுகள்

**ஆனையிறவுப் பெருந்தளத்தின் வீழ்ச்சியுடன் தொடரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் குடாநாட்டு மீட்பு நோக்கிலான ஓயாத அலைகள் நடவடிக்கைப் படையணிகளின் தாக்குதல்களால் சிக்குண்டு சிதைவுறும் இராணுவத்தின் இழப்புக்களால் தட்டுத் தடுமாறும் சிறீலங்காவில் ஏற்பட்டுள்ள அவலத்தை தந்தவருக்கே அவலத்தை தந்த அதிர்வுகள் செய்திச் சிதறல்களாக.**

## போரிடப் படையினர் தேவை
### 'குறைந்த பட்சம் நூறுபேரையாவது தாருங்கள்.'
**-ரத்வத்தை-**

தொடர்ச்சியாக யாழ் குடாநாட்டில் படுதோல்வியடைந்து வரும் சிறீலங்கா இராணுவத்திற்கு புதிதாக 20000ஆட்களை உடனடியாக திரட்டித் தரவேண்டுமென் சிறீலங்காப் பாதுகாப்பு பிரதியமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தை சிறீலங்காப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளர். சிறீலங்காப் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் 223 பேரும் குறைந்தபட்சம் நூறு பேரையாவது திரடித்தரவேண்டும் என புதிய கணக்கொன்றினை ரத்தவத்தை பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு வழங்கியுள்ளார்.

ஆனையிறவு வீழ்ச்சியும் அதன்பின்னரான புலிகளின் யாழ் நோக்கிய ஓயாத அலையடிப்பினாலும் சிதறுண்டுபோயுள்ள இராணுவத்திற்கு புத்துயிருட்டி மீண்டும் இழந்த பிரதேசங்களில் நிலைகொள்ள 20000பேர் போதுமென்று நினைக்கின்றார் போலும். இவ்வாண்டின் ஆரம்பத்திலிருந்து பலதடவைகள் ஆட்சேர்ப்பு முயற்சிகள் மேற்கொண்டும் அதற்கு அரசாங்க அதிபர்கள் முதற்கொண்டு முழு சிவில் நிர்வாக இயந்திரமும் சிங்கள மக்கள் மத்தியில் இறங்கி வேலை செய்த பொழுதிலும் ஆட்சேர்ப்பு முயற்சிகள் வெற்றி பெறவில்லை. தற்பொழுது பாதுகாப்பு பிரதியமைச்சர் இறுதியாக பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தஞ்சமடைந்துள்ளார். ■

## சிறீலங்கா நிதியமைச்சு அதிகரித்துள்ள பாதுகாப்பு வரி

யாழ் குடநாட்டில் சிறீலங்காப் படையினருக்கு ஏற்பட்டுவரும் பலத்த இழப்புக்களையடுத்து சிறீலங்கா நிதியமைச்சு தேசிய பாதுகாப்பு வரியை 5.5 வீதத்திலிருந்து 6.5 வீதத்திற்கு அதிகரித்துள்ளது. இதன் மூலம் சிறீலங்கா நிதியமைச்சு 5 பில்லியன் ரூபாய் வருமானத்தை திரட்டமுடியும் என எண்ணுகிறது. ஏனைய புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதிகளனைத்தையும் போருக்கே செலவழிப்பதற்கு சந்திரிகாவின் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இருந்தும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீதம் துண்டு விழுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை 12 பில்லியன் ரூபாய்கள் யுத்தத்தை நடத்த தேவையாக இருக்குமென பிரதி நிதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். ■

## ஆனையிறவுப் பெருந்தோல்வியால்... கொதித்துப்போயுள்ள சிங்களக் காடையர்

சிறீலங்கா இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் வடக்குத் தெற்கு உறவுப்பால நிகழ்ச்சிக்கென மட்டக்களப்பிலிருந்து அழைத்துவரப்பட்ட தமிழிளைஞர்கள் குழுவின்மீது சிங்களக் காடையர் பொல்லுகள் கத்திகள் சகிதம் தாக்கியுள்ளனர். ஆனையிறவுப் பெருந்தளத்தில் தமது இராணுவம் தோல்வியடைந்ததை சகிக்கமுடியாத சிங்களக் காடையினரே குருநாகல் பகுதியில் இவ்வாறு அப்பாவித் தமிழர்களைத் தாக்கியுள்ளனர். ■

## ஆனையிறவில் மகனை இழந்த தந்தை தற்கொலை

விடுதலைப் புலிகளின் ஆனையிறவுப் பெருந்தளத் தகர்ப்பின் போது கொல்லப்பட்ட இராணுவ அதிகாரி ஒருவரின் தந்தையார் மகாவலி ஆற்றில் குதித்து தற்கொலை செய்துள்ளார். ஆனையிறவில் பணிபுரிந்து, விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட கப்டன். டபிள்யு.ஏ. வீரகம என்ற சிங்களப்படையதிகாரியின் தந்தையே தற்கொலை செய்துகொண்டுள்ளார். கட்டுகஸ்தோட்டை என்ற இடத்தைச் சேர்ந்த டபிள்யு. அபயசிங்க என்பரே, தனது மகன் இறந்த சேதியறிந்து விரக்தியடைந்த நிலையில் ஆற்றில் விழுந்து தமதுயிரை மாய்த்துக் கொண்டார். ■

## தகவல்த் திணைக்களப் பணிப்பாளர் பணிநீக்கம்

ஆனையிறவுப் பெருந்தள வீழ்ச்சிச் செய்தியை வரைபட விபரங்களோடு வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு வழங்கியமைக்காக சிறீலங்கா வெளிவிவகார தகவற் திணைக்களத்தின் பணிப்பாளர் ரவிநாத் ஆரியசிங்க வெளிவிகார அமைச்சர் கதிர்காமரால் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். இந்தியாவில் அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் போதே இச்சம்பவம் இடம்பெற்றதாக கூறியுள்ளார் கதிர்காமர். தமது கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் தகவற் திணைக்களத்தின் பணிப்பாளர் உண்மையைச் சொன்னமைக்கு கடும் கண்டனத்தையும் தெரிவித்து, அவரை வீட்டிற்கும் அனுப்பியுள்ளார். ■

## அன்றிருந்தவர்களே இன்றுமுள்ளனர். அன்று கதாநாயகர்கள்... இன்று 'காமடி' நடிகர்களாகிவிட்டனர்.

யாழ் குடாநாட்டை ஆக்கிரமித்துக் கொண்ட சிங்களத்தின் கதாநாயகர்களே, இன்று குடாநாடு விடுதலைப் புலிகளால் மீட்கப்படும்போது, சிங்களப் படையினரை வழிநடத்திக்கொண்டிருக்கின்றனர் என்பது விசித்திரமாகப்படுகின்றது.

1996ஆம் ஆண்டு யாழ் குடாநாட்டை ஆக்கிரமித்து ஐந்து லட்சம் மக்களை இடம்பெயரவைத்தவர்களை, தமிழர்களின் கலாச்சாரத் தலைநகரை கைப்பற்றிவிட்டோம் என எக்காளமிட்டு வெற்றிச் செய்தியை பட்டோலையில் பொறித்து சந்திரிகா அம்மையாருக்கு வழங்கிய சிறீலங்காத் தளபதிகளை மறக்கமுடியுமா..? இன்றும் அவர்கள் பொறுப்பிலுள்ளபோதே, யாழ் குடாநாடு அவர்கள் கையைவிட்டு மண்ணின்மைந்தர்களின் கையில் வந்துகொண்டிருக்கின்றது. செய்திப் பட்டோலையை உள்ளம் கிளர்ச்சிகொள்ள தனது மருமகளுக்கு வாஞ்சையோடு வழங்கிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை, ஜெனரல் றொகான் தலுவத்தை, லெப்டினன்ட் ஜெனரல் சிறிலால் வீரசூரியா, மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல, மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உள்ளிட்ட சிங்களத்தின் அதியுயர் கதாநாகர்கள் ஒன்றாகக்கூடி ஆனையிறவையும் யாழ் குடாவையும் தக்கவைக்க பெரும்பாடுபட்டுக்கொண்டிருக்க, இந்த இராணுவ அரசியல் அதிசயம் நிகழ்த்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது. ■

## இராணுவ மருத்துவமனைக்கு ஜனாதிபதி நிதியிலிருந்து மேலதிக நிதி

சந்திரிகா அம்மையார் ஜனாதிபதி நிதியத்திலிருந்து 66 மில்லியன் ரூபாய்களை இராணுவ மருத்துவமனைக்கு வழங்கியுள்ளார். இதற்கான உத்தரவை கடந்தமாதம் 29ஆம் திகதி தமது செயலாளர் பாலபட்ட பெந்தியிடம் வழங்கினார். ஆனையிறவுப் பெருந்தளம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்ததன் பின்னர் வெளிநாடொன்றிலிருந்து அவசர அவசரமாக நாடு திரும்பிய பின்னர் கூட்டப்பட்ட பாதுகாப்பு மாநாட்டில் இம்முடிவு எடுக்கப்பட்டதாக தெரிய வந்துள்ளது.

ஆனையிறவுப் பெருந்தளம் இழப்பு மற்றும் யாழ் குடாநாட்டில் தீவிரமடைந்துவரும் ஓயாத அலைகள் மீட்புப் படையணிகளின் உக்கிரமான தாக்குதல்களால் காயமடைந்த ஆயிரக்கணக்கான இராணுவத்தினரைப் பராமரிப்பதற்கும், தொடர்ந்து சண்டைகளில் காயமுற்றுவரும் படையினருக்கு சிகிச்சையளிப்பதற்கும் என இராணுவ வைத்தியசாலைகளுக்கு மேற்படி நிதி வழங்கப்பட்டுள்ளது. ■

## சுயலாபந்தேடும் சிங்கள அரசியல்வாதிகளும், சிங்களச்சிப்பாய்களின் பெற்றோரைத் தாக்கும் இராணுவ அதிகாரிகளும்

ஆனையிறவுப் பெருந்தளத் தகர்ப்பில் படுகாயமடைந்த இராணுவத்தினரும், அவர்களின் உறவினர்களும் ஆளும்தரப்பு அரசியல்வாதிகளும், எதிர்க்கட்சிகளும் தமது சுயலாபத்திற்காக ஆனையிறவுப் பெருந்தள வீழ்ச்சியைப் பயன்படுத்துகின்றார்களேயன்றி பாதிக்கப்பட்ட படையினர் மற்றும் படையினரின் உறவினர் நலன்கள் மீது எதுவித அக்கறையும் காட்டவில்லை என்று கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். கொல்லப்பட்ட படையினர் உடலங்கள்மீதும் எண்ணிக்கை விளையாட்டில் ஆளும்தரப்பு அரசியல்வாதிகள் ஈடுபட்டுள்ளதாகவும் படையினரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை காயமுற்ற படைவீரர் ஒருவரின் குடும்பத்தினர். மருத்துவமனைக்கு விஜயம் செய்திருந்த அமைச்சரிடம் தமது உறவினரின் உடல்நிலை பற்றி கேட்டு வாக்குவாதப்பட்ட வேளையில் அங்கு நின்ற இராணுவ அதிகாரிகளால் தாக்கப்பட்டுமுள்ளனர். தொடர் தோல்விகளுக்கு முகங்கொடுக்க முடியாத அரசதரப்பும், இராணுவ உயர் அதிகார வட்டமும் அதிருப்தியுறும் சிங்களச் சிப்பாய்களின் உறவினர்களைத் தாக்கவும் தொடங்கியுள்ளனர். ■



நன்றி - Island

ஆனையிறவு அதிர்வுகள்

# சிங்களத்தின் போர்க்கால ஏற்பாடும் நாமும்

## – வெற்றிபெறும் தமிழீழம், தோல்வியுறும் சிங்களம் என்ற சமன்பாடு பாதுகாக்கப்பட வேண்டும் –



தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றின் அரசியல் - இராணுவ மாற்றங்கள் சிங்கள படைப்பலத்தைச் சிதைத்தழித்து வரும் இவ்வேளையில் சிங்கள அரசு உலகம் பூராவும் தமிழர்களுடன் போரிட உதவிகளைக் கோரி வருகின்றது. தமிழர்களின் சுதந்திர எழுச்சியை அழித்தொழிப்பதற்கான இறுதி முயற்சி போன்று போர்க்கால ஏற்பாடு (War footing) அறிவிக்கப்பட்டுள்ளது. சகல நிதி ஆதாரங்களும் போரிற்கான ஆதாரங்களை கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

சிங்கள தேசத்தில் ஒவ்வொரு உழைப்பாளரும் தனது வருவாயில் 6.5 வீதத்தை போரிற்காக கொடுக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளனர். சிகரட் விலையை அதிகரித்து 20மில்லியன் டொலர்களை திரட்டிட சந்திரிகா உத்தரவிட்டுள்ளார். அரசின் வரவு செலவு அறிக்கையில் இவ்வாண்டு ஆரம்பத்தில் 5300 கோடி ரூபாய்களை போரிற்கு ஒதுக்கிய சந்திரிகா மேலும் 1200 கோடியை உடனடி ஆயுதக் கொள்வனவுக்காக ஒதுக்கியுள்ளார். 800 மில்லியன் டொலர்கள் கொடுத்து தமது அரசு புதிய ஆயுதங்களை வாங்குவதாக கதிர்காமர் கூறுகின்றார்.

சிங்களப் பேரினவாதத்தின் இப் போர்க்கால நிலையானது தமிழர்களின் எழுச்சியை பெரும் ஆயுதக் குவிப்பின் மூலம் அழித்தொழித்துவிடலாம் என்ற குறுகிய போர் வெறியின் வெளிப்பாடகும்.

ஓயாத அலைகள் 3 நடவடிக்கை சிங்கள ஆதிக்கத்தின் ஆதாரமாகத் திகழ்ந்த இராணுவ பலத்தை சிதைத்துவரும் வேளையில் சிங்கள அமைப்பு தமிழீழம் மீதான தனது பிடி தளர்ந்து வருவதை அச்சத்துடன் கணித்துக் கொண்டது. தமிழீழம் பற்றிய கருத்துக்களையும், நியாயங்களையும் தமது ரிவிரச (யாழ் மீதான ஆக்கிரமிப்பு) நடவடிக்கை மூலம் சுவடே தெரியாது அழித்துவிட்டதாக நம்பிய சிங்கள அமைப்புக்கு ஓயாத அலைகள் ஒரு திகிலூட்டும் நடவடிக்கையாகவும் அமைந்துவிட்டது. பலம்மிக்க தேசிய விடுதலை இராணுவத்தைக் கொண்ட தமிழர்களுடன் தமிழர்களின் உரிமைகள் தொடர்பாக 'ஏளனமான' அல்லது ஏமாற்றகரமான பேச்சுக்களை நடத்த முடியாது என்ற உண்மை முழுச் சிங்களத்தையும் அச்சுறுத்தியுள்ளது. தேசிய சமாதான பேரவை என்ற கொழும்பு அமைப்பின் தலைவர்களில் ஒருவரான ஜெகன் பெரேரா என்பவர், தமிழர்கள் பலம்பெற்றால் சிங்களவர்கள் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்கின்றார்.

இந்த ஒட்டுமொத்த பலம் பற்றிய சிந்தனையின் வெளிப்பாடுதான் சிங்களத்தின் போர்க்கால நிலையாகும். போரையே தமது அரசு முன்னிலைப்படுத்தப் போகின்றது என்பதையும், சிங்கள துட்டகைமுனுவின் வீரம் போன்ற மகாவம்ச பொய்களே அப்போரின் ஆதாரமாக அமையப் போகின்றது என்பதையும் சந்திரிகா தெளிவாக கோடிட்டுக்காட்டியுள்ளார். சிங்கள எதிர்க் கட்சிகளும், பௌத்த பீடங்களும் தமது தேசத்திற்கு பேராபத்து ஏற்பட்டுவிட்டதாக கூக்குரலிடுகின்றன. சிங்கள இராணுவத்தினைப் பலப்படுத்தி தமிழர்களின் தேசிய எழுச்சியை அழிக்கவேண்டும் என்பதே இன்றைய சிங்களத்தின் கூட்டுக்கருத்தாகும். புலிகள் வெற்றிபெறும் நிலையில் தமிழர்களுக்கு அதிகாரங்களை வழங்க சிங்கள மக்கள் தயாரில்லை என சிங்களக் கட்சிகள் கருதுவதாக பகிரங்கமாகக் கூறப்டுகின்றது.

> **பலம்மிக்க தேசிய விடுதலை இராணுவத்தைக் கொண்ட தமிழர்களுடன் தமிழர்களின் உரிமைகள் தொடர்பாக 'ஏளனமான' அல்லது ஏமாற்றகரமான பேச்சுக்களை நடத்த முடியாது என்ற உண்மை முழுச் சிங்களத்தையும் அச்சுறுத்தியுள்ளது.**

சிங்களப் பேரினவாதத்தின் இன்றைய போர்த்திட்டமானது அடிப்படையில் ஆயுதக் குவிப்பை மையமாகக் கொண்டது. இதுவரை வெளியிடப்படும் செய்திகள் இஸ்ரேலின் போர் ஆயுதங்கள், நுட்பங்கள் என்பனவற்றை மையமாகக் கொண்டதாக அமைகின்றது. அதேவேளை பாக்கிஸ்தான், சீனா போன்ற நாடுகளிடமும் உதவிகளைப் பெற சிறீலங்கா முற்பட்டுள்ளது. முன்னாள் சோவியத் குடியரசு நாடுகளிடம் இருந்தும், கிழக்கைரோப்பிய நாடுகளிடம் இருந்தும் ஆயுதத் தரகர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான ஆயுதக் கொள்வனவுகளிற்கு பக்கபலமாக சர்வதேச நாசகார சக்திகளிடம் இருந்து ஆலோசனைகளையும் பெற சிங்களம் உத்தேசித்துள்ளதாக ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றது.

இப் போர் ஏற்பாடுகளினை தமிழீழம் எதிர்கொண்டு முறியடிக்க வேண்டிய அடுத்த கட்டத்திற்கு தயாராகிடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. சிங்களத்தின் சேதாரம் விழைவிக்கும் ஆயுதங்கள் மக்கள் குடியிருப்புக்களையும், பாடசாலைகளையும், தேவாலயங்களையும் நோக்கி திருப்பப்பட்டு சிங்களத்தின் கொலைவெறிகளுக்கு தீனியிடப்படும். அண்மையில் பூநகரியில் சிங்கள யுத்தவிமானங்கள் மக்கள்மீது குண்டுகளைப் போட்டு 5 பொதுமக்களைக் கொன்ற பின்னர் புலிகளின் தொலைத் தொடர்பு மையங்களை அழித்ததாகக் கூறிய அறிவிப்பானது சிங்களத்தின் அணுகுமுறைக்கு ஓர் உதாரணமாகும்.

இவ்வாறன மோசமான சந்திரிகாவின் போர்க்கால ஏற்பாட்டிலிருந்து மக்களை காப்பதற்கான சாத்தியமான முக்கிய வழிமுறையானது பலமான தமிழர் விடுதலை இராணுவத்தை தொடர்ந்தும் கட்டியெழுப்புவதேயாகும். இரும்புக் கவசம் போன்றதொரு பாதுகாப்பை தமிழீழ தேசத்திற்கு வழங்குவதுடன் தமிழர்களின் பாதுகாப்பான வாழ்வுக்கும் அதுவே ஆதாரமாக அமையும். அண்மைய காலங்களில் சர்வதேச நடைமுறைப் பிரச்சனைகளை அணுகும் வழிமுறைகளை நாம் அணுகி ஆராய்ந்தால் தமிழர்கள் தமது பலத்தை தொடர்ந்து அதிகரிக்க வேண்டிய தேவையை அறிந்து கொள்ளலாம்.

தமிழர்களின் பல அதிகரிப்பானது இதுவரை புலிகள் ஈட்டிய வெற்றிகளைப் பாதுகாப்பதற்குரியதாய் அமைவதுடன் சிங்களத்தின் அடுத்தகட்ட போர்வடிவத்தை முறியடிப்பதாய் அமையவேண்டும். இன்றைய தமிழர்களின் எழுச்சியும், சிங்களப்படைகளின் தோல்வியும் கொண்ட சமன்பாட்டில் எந்த மாற்றங்களையும் ஏற்படுத்த அனுமதிக்காது போரை வெல்லும் பல அதிகரிப்பையே இங்கு மையமாகக் கொள்ளவேண்டும்.

ஓயாத அலைகள் 3 நடவடிக்கையானது எமது தலைவரினதும் தளபதிகளினதும் போரியல் வழிநடத்தலையும், சாதுரியத்தையும் நிருபித்துள்ளது. போராளிகளின்



தீர்க்கமான போரிடும் ஆற்றல் நிருபணமாகியுள்ளது. எதிரியின் பலவீனமான மனோநிலையையும், உள்நிலவரங்களையும் புலப்படுத்தியுள்ளது. இதனடிப்படையில் ஆராய்ந்தால் புதிய ஆயுதக் குவிப்புக்களையும், ஆலோசனைகளையும் எமது தேசம் எதிர்த்து முறியடிக்கும் ஆற்றலைக் கொண்டது என்பது புலனாகும். எதிரியின் புதிய ஆயுத தளபாடங்களின் தொழில்நுட்ப அதிகரிப்பும், நாசகாரத் தன்மையையும் குறிவைத்தே எமது தேசிய விடுதலை இயக்கம் நகருமாறு நிர்ப்பந்திக்கப்படும். அவ்வாறு நகர்வது என்பது முழு தமிழீழ மக்கள் முன்னும் வைக்கப்பட்டுள்ள தேசிய சவால் ஆகும்.

மறுபக்கமாக ஆராயின், ஓயாத அலைகள் 3 நடவடிக்கையானது சிங்களத்திற்கு பேரழிவை ஏற்படுத்தி மண்மீட்புப் பணியைத் தொடர்கையில், எமது போராளிகளின் உயிரிழப்பை எமது உயர்ரக ஆயுத தள்பாடங்கள் குறைத்து வந்துள்ளதை களமுனைத் தரவுகள் நிரூபிக்கின்றன. பெரும் எண்ணிக்கையில் உயிர் ஈகம் செய்து 1991இல் ஆனையிறவுப் படைத்தளத்தைத் தாக்கிய எமது தேசம் இம்முறை பீரங்கிப்படைகளின் பலத்தால் குறைந்த போரளிகளின் இழப்புடன் பெருவெற்றியை ஈட்டியது.

இதனடிப்படையில், சிங்களத்தின் போர்க்கால ஏற்பாட்டிற்கு நிகராக தமிழர்களின் போர்க்கால ஏற்பாடுகள் செயற்பட வேண்டும். சிங்களத்தின் சுடுகல, பல அதிகரிப்பினை தமிழீழம் பெறுவதற்கான தார்மீகப் பொறுப்பு புகலிடத்தமிழர்களின் முன் வைக்கப்பட்டுள்ளது.

சிங்களத்தின் கிபீர்களை சுட்டுவீழ்த்தும் வரலாற்றை எழுதவும், சிங்களத்தின் நெடுந்தூர பீரங்கிகளைத் தாக்கியழிக்கும் பலத்தினை தமிழீழ தேசத்திற்கு வழங்கவும் புகலிடத்தமிழர்களால் முடியும்.

**நாதன்**

## வரலாற்றில் முதற்தடவையாக... ஆனையிறவில் கம்பீரமாய் பறக்கும் தமிழீழத் தேசியக்கொடி

தமிழீழத்தில் ஆக்கிரமிப்புச் சின்னமாக, அடக்குமுறையின் சின்னமாக விளங்கிய, சிங்களத்தின் கௌரவத்தின் சின்னமாக கருவூட்டப்பட்ட ஆனையிறவுப் பெருந்தளம் நாற்பத்தெட்டு மணிநேர கடும் சமரின் இறுதியில், விடுதலைப் புலிகளால் 22.04.2000 அன்று, வெற்றிகொள்ளப்பட்டது. அற்புதமான தமிழரின் விடுதலை வரலாறு அன்று பதிவாகியது. ஆனையிறவை வெற்றிகொண்ட தமிழர் சேனை, அங்கு தமிழீழத் தேசியக்கொடியை ஏற்றிவைத்தது. விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரும், ஆனையிறவுப் பெருந்தளத்தில் படைநடத்துகையை மேற்கொண்ட முக்கிய தளபதிகளில் ஒருவருமான, கேணல் பானு அவர்கள், தமிழீழத் தேசியக் கொடியை 23.04.2000 அன்று ஏற்றிவைத்தார்.

## ஆக்கிரமிப்பாளனின் ஆயுதங்கள் விடுதலைப் போரின் பலமாக...

ஆனையிறவுப் பெருந்தளம் வெற்றிகொள்ளப்பட்ட, 22.04.2000 அன்று, அங்கிருந்து அள்ளப்பட்ட ஆயுதங்களில் முக்கியமானவை சிலவற்றின் விபரங்களை கீழே தருகின்றோம். போராட்ட வரலாற்றில் முதல்தடவையாக, எதிரிப்படையிடம் இருந்து, ஒரே இடத்தில், பலகோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

ஆயுத தளபாடங்களின் விபரம் வருமாறு

| | | |
|---|---|---|
| ⇨ | 152 mm ஆட்லறிப்பீரங்கிகள்: | 3 |
| ⇨ | 122 mm ஆட்லறிப்பீரங்கிகள்: | 2 |
| ⇨ | 120 mm கனரக மோட்டார்கள்: | 12 |
| ⇨ | 25 mm விசேட பீரங்கி: | 1 |

⇨ பெருந்தொகையான 50 கலிபர் துப்பாக்கிகள்
⇨ பல நூற்றுக்கணக்கான தன்னியக்கத்துப்பாக்கிகள்
⇨ பெருமளவிலான எறிகணைகள் தோட்டாக்கள் மற்றும்
⇨ வெடிபொருட்கள்
⇨ சீன, ரஸ்சிய யுத்த தாங்கிகள்
⇨ கவச வாகனங்கள்
⇨ விசேட துருப்புக்காவிகள்
⇨ புல்டோசர்கள்
⇨ மற்றும் பல இராணுவ வாகனங்கள் உட்பட பெருந்தொகை ஆயுததளபாடங்கள் (Ammunition) கைப்பற்றப்பட்டுள்ளன.




# அடுத்தடுத்து வீழ்ச்சியுறும் சிறீலங்கா முகாம்கள்? தமிழர் நிலைப்பாட்டை உலகுக்கு உணர வைக்கிறது

சிங்கள சிறீலங்காவின் ஆனையிறவு முகாமின் வீழ்ச்சி தமிழீழத் தேசிய விடுதலைப்போராட்ட வரலாற்றில் புதியதோர் அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்துள்ளது. எங்களைக் கொல்ல எங்கள் மண்ணில் ஆழக்குழிகள் தோண்டியவர்கள் இன்று அவர்கள் தோண்டிய குழிகளுள் தாங்களே வீழ்ந்து அழியும் காலமொன்று எம் மண்ணெங்கும் உருவாகி நிற்கும் யதார்த்தம் கண்டு அஞ்சுகின்றனர். ஆனையிறவில் அழிந்தது போதும் பளையில் பலியானது காணும் என்று சிங்களப் படைகளின் படை அதிகாரிகள் பதறுகின்றனர். தமிழர்களைக் கொன்று அழிப்பதைத் தனது பெருமையாக எண்ணிச் செயற்பட்ட சிங்களச் சிப்பாய் இன்று தன் தலை சிதறாது தான் எப்படித் தப்பியோடலாம் எனத் தலைமயிரைப் பிய்த்துக் கொண்டு நிற்கும் காலமொன்று இன்று உருவாகி விட்டதை யாராலும் மறுக்க முடியாது.

எங்களின் மண்ணை படைபலம் கொண்டு ஆக்கிரமிக்கலாம் ஆனால் அவ்வாறு செய்யும் ஆக்கிரமிப்பாளனுக்கு எங்கள் மண்ணே கல்லறையாகும் என்று எங்கள் தேசத்தலைவன் 1995 மாவீரர்தின உரையில் விடுத்த எச்சரிக்கையை சிங்கள சிறீலங்கா அலட்சியம் செய்தது. எங்கள் தேசத்தை நிர்மூலமாக்கியது. எங்கள் மக்களைக் கொன்று குவித்தது. தமிழ்ப் பெண்களை தனது படைகளின் பாலியல் கொடுமைகளால் வாட்டி வதைத்தது. காரணமின்றி எங்கள் தமிழீழ உடன்பிறப்புக்களை கைதுசெய்து உயிரோடும் உயிரின்றியும் மண்ணுள் புதைத்துவிட்டு காணாமல் போனவர்கள் பட்டியலில் அவர்கள் பெயர்களை எழுதி மகிழ்ந்தது. எங்கள் சின்னஞ் சிறுசுகளுக்கு உணவும் மருந்தும் கொடுக்க மறுத்து அவர்களின் வீடுவாசல்களை விட்டு அவர்களைத் துரத்தி சத்தற்ற சொத்தற்ற சந்ததியாக தமிழர் சந்ததிகளை மாற்றும் அப்பட்டமான இனஅழிப்பு அரசியல் திட்டங்களை தினம் தினம் நடைமுறைப் படுத்தியது. இவைகளை எல்லாம் கண்டும் கேட்டும் எரிமலையாக எங்கள் நெஞ்சங்கள் கொதித்தன.

நெஞ்சினில் அனல் ஏந்தி இந்த நாகரீக உலகில் இவ்வளவு மிருகத்தனங்களையும் செய்தும் சிறீலங்காவை ஏன் என்று கேட்கத் திராணியற்ற சர்வதேச அரசாங்கங்களினதும் அமைப்புக்களினதும் கையாலாகத்தனங்களையும் சுயநலப்போக்குகளையும் கண்டு உலகெல்லாம் வாழும் புலம்பெயர் தமிழ் மக்கள் துடித்தனர்.

ஆயினும் எம் தலைவனோ சத்தியத்தின்மீதும் தமிழீழ மக்கள்மீதும் அசைக்கமுடியா நம்பிக்கையுடன் எமது தயாகத்தை நாம் மீண்டும் மீட்போம் என்ற திடமான உறுதியுடன் எமது மக்களைக் கட்டிஎழுப்பினான். மக்களின் பேரெழுச்சி போரெழுச்சியாகி, ஓயாத அலைகள்3 தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள சிறீலங்காவின் படைகளை அள்ளிச் செல்லும் கங்கையாக வன்னிப்பெருநிலப்பரப்பில் ஊற்றெடுத்து யாழ் குடாநாடெங்கும் பாய்ந்து வருகிறது.

இந்த வெற்றிப்பாய்ச்சலில் யாராலும் அசைக்க முடியாது என்று அமெரிக்க இராணுவ நிபுணர்களே சான்று வழங்கிய ஆனையிறவுப் பெருந்தளம் சித்திரை 22இல் தகர்ந்து நொறுங்கியது. பளையும் ஆனையிறவும் வீழ்ச்சி அடைந்தமை கண்ட அனைத்து உலக இராணுவ அரசியல் விமர்சகர்களும் இந்த பாரிய படை முகாம்களின் வீழ்ச்சிகளூடாக சந்திரிகா அரசாங்கத்தின் பரப்புரைகளின் பொய் முகங்களையும் தரிசித்துக் கொண்டனர். இதனால் சந்திரிகா அரசாங்கத்தின் பொய்யுரைகளுக்கு மதிப்பளித்து, தமிழீழ மக்களின் பேரன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய எங்கள் தேசத்தலைவர் பிரபாகரனை வசைபாடிய பத்திரிகைகள் பல தங்கள் கடந்த காலத் தவறினை உணர்ந்தனர். தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தைக் குறித்து புதிய அணுகுமுறைகள் சர்வதேச மக்கள் தொடர்பு சாதனங்களில் தோன்றியுள்ளன. இந்த மகத்தான திருப்புமுனை ஆனையிறவு விடுவிப்புடன் ஆரம்பமாகி யாழ்ப்பாண மண்ணை எம் படைகள் நெருங்க நெருங்க அழுத்தம் பெற்றுவருவதைக் காணக்கூடியதாக உள்ளது. பிரித்தானியாவின் உலகப் புகழ்பெற்ற பத்திரிகைகளான "த கார்டியன்" - "த டைம்ஸ்" போன்ற பத்திரிகைகளில் இம்மாற்றத்தை நன்கு அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

"த டைம்ஸ்" பத்திரிகை விடுதலைப் புலிகளின் வெற்றிகளை தமிழர்களின் வெற்றி எனத் தலையங்கமிட்டு எழுதியது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான சண்டையில் இறக்கி ஆண்டொன்றுக்கு எண்ணூற்று ஐம்பது மில்லியன் அமெரிக்க டொலர்களை யுத்தமுயற்சிகளுக்காகச் செலவிட்ட போதிலும் அதனால் வெற்றி பெறமுடியாது இருப்பது மட்டுமல்லாது அவர்கள் மேல் பண ரீதியாகவோ அல்லது இராணுவ ரீதியாகவோ மேலாதிக்கம் செலுத்தவும் முடியவில்லை. தமிழர்களின் கேந்திர முக்கியத்



துவம் வாய்ந்த வடமாகாண நகரை தக்கவைப்பதற்குப் பதிலாக தமிழர்களின் பதில்த் தாக்குதல்களையே எல்லாப் பக்கங்களிலும் எதிர்நோக்கி வருகிறது.

"த கார்டியன்" பத்திரிகை "த டைம்ஸ் ஒவ் இந்தியா" மே 10இல் சிறீலங்காவில் இந்தியத் தலையீடு குறித்து வெளியிட்ட செய்தியின் சுருக்கத்தைச் சுட்டிக்காட்டியது. அச்சுருக்கம் வருமாறு :

இந்தியப் பொதுமக்கள் சிறீலங்காவின் நலனுக்காக தங்கள் பிள்ளைகள் இலங்கை மண்ணில் மடிவதை அடியோடு வெறுக்கின்றார்கள். இந்திய அரசாங்கம் ராஜீவ் காந்தி காலத்தில் தலையிட்டு 1200 படையினருக்கு மேல் இழந்த கசப்பான அனுபவங்களின் அடிப்படையில் எவ்வித தலையீட்டையும்

**பற்றிமாகரன்**

விரும்பாது. அத்துடன் தனது எல்லைக்குள் வடகிழக்கு பகுதிகளிலும் காஸ்மீரிலும் நீண்டகாலமாக உள்நாட்டு யுத்தங்களில் ஈடுபட்டு வந்த போதிலும் தனது எல்லைக்கு வெளியே இன்னொரு நாட்டில் அவ்வாறு செய்வது கடினமானது என்பதையும் உணர்ந்துள்ளது. நியூ டெல்லியில் இருந்து வெளிவரும் "அவுட்லுக்" பத்திரிகை விடுதலைப் புலிகள் தமது வெற்றிக்கு குறுக்காக யாரும் நிற்பதை அனுமதிக்க மாட்டார்கள். அவர்கள் எத்தகைய வழிகளையும் கையாண்டு தங்கள் எதிரிகளை அழித்து வருவது நன்கு அறிந்த விடயம். எனவே இந்தியா இலங்கைப் பிரச்சினையில் கைகளை வைக்காது தள்ளி நிற்க வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தமையையும் "த கார்டியன்" பிரசுரித்திருந்தது.

இவ்வாறு "த கார்டியன்" தமிழர் பிரச்சினை குறித்த செய்திகளை வெளிக்கொணர்வதில் காட்டி வந்த ஆர்வம் மே 12ஆம் திகதி புலி உறுமல்கள் என்ற தலைப்பில் - எவ்விதம் இளம் விடுதலைப் புலிகள் இராணுவத்தை அவர்களின் கால்களின் கீழ் கொண்டு வந்தனர் என்ற உப தலைப்புடன் ஒரு தெளிவான கட்டுரையை பிரசுரித்தது. பெண் போராளி ஒருவரின் ஒரு பக்க அளவான நிழற்படத்தை முன்பக்கப் படமாகப் பிரசுரித்த கார்டியன் உள்ளே தேசியத் தலைவர் அவர்களின் படமொன்றையும் வவுனியாவில் உள்ள அகதி தமிழ்ப்பெண் ஒருவர் குழந்தையுடன்

"த எக்னோமிஸ்ட்" வார இதழ் 1995இல் சிறீலங்கா அரசாங்கம் யாழ்ப்பாணத்தைப் பிடிக்க எடுத்த முயற்சிகளை சுருக்கமாகக் குறிப்பிட்டு பின்னர் 22.04.00 உடன் (ஆனையிறவு வீழ்ச்சியுடன்) அந்த முயற்சிகள் எல்லாம் வீணாயின என்பதைச் சுட்டிக்காட்டி சிறீலங்காவின் யாழ் குடாநாட்டை பிடிக்க எடுத்த முயற்சிகளில் இழக்கப்பட்ட ஆளணியிழப்புக்களும் பொருட்சேதங்களும் அதற்கு வீணாகியுள்ளது என்பதை தெளிவுபடுத்தியது.

"த கார்டியன்" பத்திரிகையின் செய்திகள் தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து மிகத் தெளிவான பார்வை ஒன்றை சர்வசே மக்கள் முன் முன்வைக்கும் தன்மையாக வளர்ச்சி பெற்று வருவதை காணலாம். எனவே அதனை சிறப்பான முறையில் இங்கு எடுத்து நோக்குவது மாறிவரும் உலகப் பார்வையைப் புரிந்து கொள்ள உதவும்.

மே 6ஆம் திகதி "தமிழ் கார்டியன்" செய்தியை "த கார்டியன்" பத்திரிகை விவரணக் குறிப்பாகப் பிரசுரித்தமை தமிழர்களின் கருத்துகளையும் உலக மக்கள் புரிந்து கொள்ள வழிகோலியது. அச் செய்தி வருமாறு :

ஆனையிறவு வீழ்ச்சியானது விடுதலைப் புலிகளின் களமுனை வெற்றிகளின் மகத்தான வெற்றியாக சர்வதேச ரீதியில் கருதப் படுகிறது. இந்த வெற்றியானது இலங்கைத் தீவின் இராணுவச் சமநிலை விடுதலைப் புலிகளின் பக்கமாக மாறியுள்ளமையை புலப்படுத்துகிறது. இந்த நிலையிலும் சிறீலங்கா அரசாங்கம் அமைதியான வழிகளில் இந்தப்பிரச்சினையைத் தீர்க்க தீவிரமான அக்கறை எதையும் காட்டவில்லை. ஆயினும் களநிலை யதார்த்தங்களின்படி முப்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட சிறீலங்காப் பாதுகாப்பு படைகளுக்கு விடுதலைப் புலிகளின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தும் ஆற்றல் இல்லாது உள்ளது. அப்படைகள் தாம் தப்பிப்பதற்கான வழிகளைத் தேடுவதிலேயே அக்கறை காட்டுகின்றன.

"த கார்டியன்" பத்திரிகை, பிபிசி நிருபர் அலஸ்டேயார் அவர்களின் சிறீலங்காப் படைகளின் இராணுவ இயலாமை குறித்த கருத்தையும் வெளியிட்டு இருந்தது. அக் கருத்து வருமாறு :

சிறீலங்கா அரசாங்கம் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட துருப்புக்களை தமிழீழ




Le Monde 12-5-00

ஒரு வார ஓய்விற்குப் பின், மிகக் கடுமையான போர் இலங்கையின் வட பகுதியில் மூண்டுள்ளது. இப்போது, மோதல்கள் யாழ் நகரின் புறநகர்ப் பகுதிகளில் இடம்பெறுகின்றன. அரசு ஊரடங்குச் சட்டத்தை அமுல்ப்படுத்தியுள்ளது. நாவற்குழியின் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பாலத்தின் இழப்பால் படையினரில் ஒரு பகுதியினர் துண்டிக்கப்பட்டு நிற்கின்றனர்.

கடந்த ஏப்பிரல் 22இல் ஆனையிறவுத் தளத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, இராணுவத்தினரின் முதற் பாதுகாப்பு வேலியும், யாழ் நகருக்குத் தெற்கில் உள்ளதுமான கிளாலியிலும் பலத்த மோதல்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமையும், அரசு யாழ் நகரத்தை கடைசி இராணுவ வீரன் இருக்குமளவும் காப்பாற்றப் போவதாக அறிவித்துள்ளது. இப்போதைய போர் நாட்டின் நிலையைக் குறிக்கின்றது. இராணுவத்தின் தேவைக்கேற்ப போர் நடத்தப்படவில்லை. மாறாக அப்போதைக்கப்போது நாட்டில் தோன்றும் அரசியல் தேவைக்கேற்ப போர் வழிநடத்தப்படுகின்றது. இக் காரணத்துடன் ஒரு முழு மொத்த ஊழல்கள், இராணுவ அதிகாரிகளின் ஓயாத இடமாற்றங்கள், படையினரின் அக்கறையின்மை போன்றவை இராணுவத்தின் தோல்விகளுக்கு காரணங்கள்.

இராணுவத்துறையிலிருந்து கிடைக்கும் விபரங்களின் படி, புலிகளின் 80 வீத ஆயுதங்கள் இராணுவத்தினரிடமிருந்து பறிக்கப்பட்டவையே. சிங்கள இராணுவத்தினரில் பலருக்கு ஏன் இந்த யுத்தம் என்பது புரியவில்லை. படையிலிருந்து இது வரை 20,000 இராணுவத்தினர் ஓடிவிட்டனர்.

ஆனால் புலிகளோ போர் புரிவதில் மிகுந்த ஆர்வத்துடன் வீரத்தோடு மோதுகின்றனர். போராளிகளின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில், இராணுவத்தின் அதிகாரிகளின் எண்ணிக்கை ஐந்து மடங்கு


Les « Tigres » tamouls du Sri Lanka accentuent leur pression militaire sur Jaffna

Les affrontements se déroulent dans les faubourgs de la ville, où le couvre-feu a été instauré

அதிகரித்துக் காணப்படுகின்றது. புலிகள் இராணுவத்திடமிருந்து தாங்கள் பறித்தெடுத்த பீரங்கிகளின் உதவியோடு தூரத்திலிருந்து கூட துல்லியமான தாக்குதல்களை இராணுவ நிலைகள் மீது தாக்குகின்றனர்.

—பிரான்சிஸ் சியாபக்ஸ்—

மெருகூட்டவென வெளியிட்டிருந்தனர். அக் கட்டுரையில் இருந்து மக்கள் கூறியதாக கட்டுரையாளர் "லூக் கார்டிங்" கூறியுள்ள சில முக்கிய கருத்துக்கள் வருமாறு

## ஆனையிறவு வெற்றி குறித்த மக்களின் கருத்துக்கள்

### கிறிஸ்மஸ் போல் மகிழ்ச்சி தருகிறது

ஆனையிறவு வீழச்சியுற்ற நாளை நாங்கள் கிறிஸ்மஸ் கொண்டாடுவது போல கொண்டாட விரும்புகின்றோம்.

### விடுதலைப் புலிகளே எம் உண்மையான பிரதிநிதிகள்

ஆனையிறவு வீழ்ச்சி கண்டு நாங்கள் மிக மிக மகிழ்கின்றோம். விடுதலைப் புலிகளே எங்களின் உண்மையான பிரதிநிதிகள். சிறீலங்கா அரசாங்கம் அவர்களைப் பயங்கரவாதிகள் எனலாம் ஆனால் அவர்கள் எங்களின் சுதந்திரப் போராட்ட வீரர்கள் தமிழர்களான எங்களுக்காகவே அவர்கள் போராடுகின்றனர். அவர்கள் யாழ்ப்பாணத்தை மீளக் கைப்பற்றுவார்கள் என்பதில் நாங்கள் மிக உறுதியாக உள்ளோம். அது எங்களின் சொந்த மண்.

தேசியத் தலைவர் பிரபாகரன் எங்களின் இரட்சகர் பிரபாகரனை பொல் பொட் என அரசாங்கம் சொல்வதை நாங்கள் மறுக்கின்றோம். அவர் மிக மிக பெரிய மனிதர். அவரே எங்களின் இரட்சகர்.

## மக்கள் கூறியதாக லூக் கார்டிங் எழுதியுள்ள மற்றைய கருத்துக்கள்

### கருத்துச் சுதந்திரம் இல்லை

நாங்கள் எங்கள் கருத்துக்களைச் சுதந்திரமாக தெரிவிக்க விரும்புகின்றோம். ஆனால் சிறீலங்காப் படைகள் எம்மைக் கட்டுப்படுத்தும் சூழலில் எம்மால் இதனை எப்படிச் செய்யமுடியும், என்று வவுனியாவில் உள்ள அகதி ஒருவர் கூறியுள்ளார்.

### விடுதலைப் புலிகளும் மக்களும் ஒருவரே

தமிழ்ப் பொதுமக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் வித்தியாசம் இருப்பதாக சிறீலங்கா அரசாங்கம் ஒரு பொழுதும் கருதுவதில்லை என ஒரு வழக்கறிஞர் கூறினார்.

விடுதலைப் புலிகள் எங்களுக்காகவும் எங்கள் தேசத்திற்காகவுமே போராடுகின்றார்கள் என்னுடைய பிள்ளை போய் விடுதலைப் புலியாகச் சேர்ந்தாலும் நான் அதனை வரவேற்பேன்.

### தமிழ் மக்களுக்கு வித்தியாசமான சட்டங்கள்

தமிழ் மக்களுக்கு மட்டும் அவர்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் உள்ளே வருவதற்கும் வெளியே போவதற்கும் சிறீலங்காப்படைகளிடம் பாஸ் பெற வேண்டும்.

### இன ஒதுக்கலே பிரச்சினையின் மூல காரணம்

தமிழர்களைச் சிங்களப் பெரும்பான்மையினர் இரண்டாவது பிரஜைகளாக நடாத்த எடுத்த முயற்சிகளே தமிழர்களைத் தேசிய விடுதலைப் போராட்டமொன்றை முன்னெடுக்க வைத்தது. 1956இல் சிங்களம் மட்டும் கொண்டு வரப்பட்டதினால் பிரித்தானிய காலம் முதல் அரசாங்கப் பதவி வகித்து வந்த தமிழர்கள் வேலைகளை இழந்து பாதிப்படைந்தனர். இவ்வாறு ஆரம்பமான இன ஒதுக்கல் தமிழர்களை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து போராடித்தான் வாழவேண்டுமென்ற நிலைக்குத் தள்ளியது. இந்தப் போராட்டத்தில் இதுவரை 55000க்கு மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர். 5000 அளவிலான விடுதலைப் புலிகள் பெரும்பாலும் இளவயதினர்கள் 120000க்கு மேற்பட்ட படையினரை எதிர்த்து தீரமுடன் போராடி வருகின்றனர். நாட்டின் ஐந்தில் ஒரு பகுதி விடுதலைப் புலிகளின் கையில் இருக்கிறது.

### வடக்கு கிழக்கு செயலளவில் ஒன்றே

சிறீலங்கா அரசாங்கம் வடக்கு கிழக்கை கொள்கையளவில் தனித்தனியான மாவட்டங்களாகப் பிரித்தாலும் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை செயலளவில் வடக்கும் கிழக்கும் ஒரு பிரதேசமே. மேலும் வவுனியாவை இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக விடுதலைப் புலிகள் கருதி அதற்கு முன்னுரிமை கொடுத்து தற்பொழுது மீட்காத போதிலும் வவுனியா தமது பிரதேசம் தாம் விரும்பிய நேரத்தில் விரும்பியதை செய்யக்கூடிய பிரதேசமாக என்றும் இருக்க வேண்டும் என்பதில் விடுதலைப் புலிகள் தெளிவாக உள்ளனர்.

### சிறுவர்கள் படை என்பது உண்மையல்ல

12 வயதிலேயே தமிழீழத்தில் உள்ள சிறுவர்களுக்கு துவக்கை எவ்விதம் பயன்படுத்துவதென்பது தெரியும். விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் போரிட அனுப்புவதாக சிறீலங்கா அரசாங்கம் கூறிவந்த போதும் விடுதலைப் புலிகள் யாராயிருப்பினும் 17 வயதிலேயே அவர்களை போராளிகளாக களங்களுக்கு அனுப்புவார்கள். அதுவரை அவர்கள் உதவிகளை மட்டுமே செய்யமுடியும்.

### கைதானவரின் மனைவிக்கு உணவு மான்யம் இல்லை

எனது கணவரை சிறீலங்காப் படைகள் கைதுசெய்து கொண்டுபோய் இரண்டு வருடங்கள். அவரை தென்னிலங்கையில் உள்ள சிறையில் அடைத்து வைத்துள்ளனர். அவருக்கு சிறீலங்கா பயங்கரவாதி என முத்திரை குத்திய நாள் முதல் எனக்கு உணவுக்கான மானியம் எதையும் சிறீலங்கா தர மறுக்கிறது. என் நாலு குழந்தைகளில் ஒன்று இறந்துவிட்டது. சமீபத்திலும் வேறு 1000 தமிழ் இளைஞர்கள் இவ்வாறாக கைதாக்கப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். ■

# செங்குருதிச் சுவரே பாடு!

செங்குருதிச் சுவரே பேசு!
தமிழனின் குருதி
தெறித்துச் சிவந்த
செங்குருதிச் சுவரே பேசு!

ஆனையிறவு கடக்கையில்
ஆதிக்கர் சிறைபிடித்து
ஆணுடம்பு நறுக்கி......
தெறித்த குருதியில்
துடித்துச் செத்த
அப்பாவி இளைஞனின்
வதையே பேசு!
மூத்த மகளின்
மறுமணத்தைக்
காணச் சென்ற
முத்தையாக் கிழவரை

தடுத்து.... இழுத்து.....
கிழட்டுப்புலி நீயென
உடல் சிதைத்துக் களித்த
மூர்க்கர்களின் வதையே பேசு!

விடுமுறைக்குச் சென்றவளை
பிடித்திழுத்துச் சென்று
துகில் உரிந்து...
துவண்ட விழிநீர் பருகி....
கொடும் வதை புரிந்து....
மானம் கிழித்து மகிழ்ந்த
மா பிசாசுகளின்
வக்கிர வதையே பேசு!
இன்னும் இன்னும்
*மஸ்கட கொழுக்கிகளில்
வறண்டு... துவண்டு தொங்கிய

எத்தனையோ
தமிழர் உடலங்களின்
வதையே நீ பேசு!

இப்போ
பாடு சுவரே பாடு!
வதைகளின் கதை
முடிந்ததென்று பாடு!
தமிழர் வரலாற்றின்
துயரத்தின் சின்னமொன்று
சரிந்ததென்று கூத்தாடு!
பாடு சுவரே பாடு!
செங்குருதிச் சுவரே பாடு!!

மாணி.நாகேஸ்

*சிங்கள மொழியில் இறைச்சிக்கடையைக் குறிக்கும் சொல்

## கொழும்பு, தமிழகப் பத்திரிகைகளில் வெளிவந்த கருத்துச்சித்திரங்கள்

வீரகேசரி







தினகரன் - தமிழ்நாடு



# கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர்கள்

## வீர வணக்கம்

*27-11-1999 அன்று தமிழீழக் கடற்பரப்பில் ஏற்பட்ட படகு வெடிவிபத்தின்போது வீரச்சாவடைந்த 11 போராளிகளின் விபரம்.*

**கடற்புலி கப்டன் தமிழிசை**
தெய்வேந்திரம் தேவசுகிர்தா, யாழ்ப்பாணம்

**கடற்புலி கப்டன் மணியரசி**
தர்மலிங்கம் சுகிர்தா, யாழ்ப்பாணம்

**கடற்புலி மேஜர் சித்தாரா**
தாயுமானவர் தனலட்சுமி, யாழ்ப்பாணம்

**கடற்புலி 2ம் லெப். அலையிசை**
கதிர்காமநாதன் கோகுலா, யாழ்ப்பாணம்

**கடற்புலி மேஜர் காண்டீபன்**
மூர்த்தி குமார், கிளிநொச்சி

**கடற்புலி லெப். அகிலன் அல்லது பூங்கழுவன்**
ரஞ்சன் கமல்ராஜ், யாழ்ப்பாணம்

**கடற்புலி 2ம் லெப். பரதன்**
சின்னவன் இளங்கோ, யாழ்ப்பாணம்

**கடற்புலி 2ம்.லெப் அன்பரசன்**
செல்வராசா உதயகுமார், யாழ்ப்பாணம்

**கடற்புலி மேஜர் கண்ணன்**
சிற்றம்பலம் குலசிங்கம், யாழ்ப்பாணம்

**கடற்புலி மேஜர் கலையமுதன்**
சக்திவேல் ராஜ்குமார், யாழ்ப்பாணம்

**கடற்புலி 2ம் லெப் ஈழநேசன்**
நடராசா கோகுலகுமார், யாழ்ப்பாணம்

*தொடரும் ஓயாத அலைகள் நடவடிக்கைகளின்போது வீரச்சாவடைந்த மாவீரர்களின் கிடைக்கப்பெற்ற மாவீரர்களினது விபரம்.*

**வீரவேங்கை சமர்நங்கை**
பரமகுரு யசோதா, கிளிநொச்சி

**வீரவேங்கை கண்ணாளன்**
செபமாலை சுரேஸ்குமார், யாழ்ப்பாணம்

**வீரவேங்கை ஈழக்குமரன்**
குணரட்ணம் பரணிதரன், யாழ்ப்பாணம்

**வீரவேங்கை தர்மசீலன் அல்லது சீராளன்**
சின்னத்துரை சாந்தன், முல்லைத்தீவு

**வீரவேங்கை நேயச்சுடர்**
அரியம் செந்தூரன் யாழ்ப்பாணம்

**வீரவேங்கை நிர்மலா**
செல்வரட்ணம் விஜயலட்சுமி, பூநகரி

**வீரவேங்கை புவனா**
தம்பிராசா சுதாஜினி, யாழ்ப்பாணம்

**கப்டன் இனியவன்**
கதிர்காமர் தயாபரன், யாழ்ப்பாணம்

**கப்டன் மணியரசன்**
சிவம் சிவமயம், யாழ்ப்பாணம்

**மேஜர் இளவரசன்**
செல்வராசா அற்புதன், யாழ்ப்பாணம்

**வீரவேங்கை பிறையரசி**
டானியல் ஞானேஸ்வரி, பரந்தன்

**மேஜர் தமிழினியன்**
காத்தமுத்து கந்தசாமி, மட்டக்களப்பு

**2ம் லெப். பாரதி**
பூபாலபிள்ளை- தோபாவினி, மட்டக்களப்பு

**வீரவேங்கை ரவி**
திருமால்- தேவராசா, பூநகரி.

**வீரவேங்கை உயிர்வேந்தன்**
கணேசமூர்த்தி - நாகராசா, இந்தியா
இவர் கடந்த 07.04.00 அன்று சுகயீனம் காரணமாக முல்லைத்தீவில் சாவடைந்தார்.

எல்லைப் படை வீரர்
**இராசேந்திரம் - ரதி அல்லது சாந்தி,** யாழ்ப்பாணம்

**வீரவேங்கை பூவிழி**
நாகலிங்கம் - பிறேமலதா, யாழ்ப்பாணம்

**2ம் லெப். கலாமதி**
இமானுவேல் - இமெல்டா, மன்னார்

**லெப். பாவரசி**
சுப்பிரமணியம் - கௌரி, யாழ்ப்பாணம்

**வீரவேங்கை மைதிலி,**
பாலசுப்பிரமணியம் வசந்தகுமாரி, யாழ்ப்பாணம்

**வீரவேங்கை அன்புத்தேவன்**
விவேகானந்தக் குருக்கள் துஷ்யந்தன், யாழ்ப்பாணம்

**வீரவேங்கை தாரகி அல்லது செந்தூரா**
தியாகராசா ஜெபர் கனிஷ்ரா, முல்லைத்தீவு

**2ம் லெப். பாவரசி**
கணபதிப்பிள்ளை - தயாநிதி, மாங்குளம்

**வீரவேங்கை வேங்கை**
சிவராசா - சிவகரன், யாழ்ப்பாணம்

**வீரவேங்கை சென்னிச்செல்வன்**
அரியநாயகம் - அருள்ராஜ், மட்டக்களப்பு

**வீரவேங்கை கலைமாறன்**
அருமைத்துரை - சிவகுமார், யாழ்ப்பாணம்

**வீரவேங்கை நிலாயினி**
குலவீரசாமி - சாந்தகுமாரி, முள்ளியவளை

**வீரவேங்கை பாவேந்தன்**
பரமலிங்கம் கலைச்செல்வன், நெடுங்கேணி

**வீரவேங்கை செந்தமிழ்**
அண்ணாவி செல்வராணி, கிளிநொச்சி

**வீரவேங்கை நேசன்**
கதிர்காமநாதன் ஜெயச்சந்திரன், வவுனியா

**மேஜர் கவிதரன்**
சேரன்சிங்கம் கிருஷ்ணகாந்தன், யாழ்ப்பாணம்

**மேஜர் அகல்நெஞ்சன்**
வெற்றிவேல் - தில்லைநாதன், யாழ்ப்பாணம்

**மேஜர் அருள்மணி**
பிள்ளையான் - புண்ணியமூர்த்தி, மட்டக்களப்பு

**லெப். செங்கதிர்**
சித்திரவேலாயுதம் - சிவநாதன், பூநகரி

**2ம் லெப். இளங்கோ**
தனபாலசிங்கம் - கஜீவன், யாழ்ப்பாணம்

**2ம் லெப். ஈழமணி**
செல்வன் - காந்தராசா, யாழ்ப்பாணம்

**2ம் லெப். இசைவீரன்**
கணபதிப்பிள்ளை - சுரேந்திரன், யாழ்ப்பாணம்

**2ம் லெப். பாண்டியன்**
கதிரவேலு - புஷ்பராம், முல்லைத்தீவு

**2ம் லெப். கடல்நிலவன்**
பரஞ்சோதி - மனோகரன், மாங்குளம்

**2ம் லெப். தென்றல் அல்லது இளந்தென்றல்**
கணபதிப்பிள்ளை - கமலநாதன், யாழ்ப்பாணம்

**வீரவேங்கை சிரோன்மணி**
குமாரசாமி - நிலோஜினி, யாழ்ப்பாணம்

**வீரவேங்கை வண்ணபாலன்**
சிவநாதபிள்ளை - ஜெகதி, மட்டக்களப்பு

எல்லைப்படைவீரர்
**ஜேசுதாஸ் டேவிற் மைக்கல்**
முல்லைத்தீவு

**வீரவேங்கை அருள்மகள்**
தியாகராசா - விஜயகுமாரி, யாழ்ப்பாணம்

**வீரவேங்கை மருதா**
மகேந்திரம் - நகுலேஸ்வரி, யாழ்ப்பாணம்

**வீரவேங்கை வதனி அல்லது வினோதி**
விக்னேஸ்வரன் - சுதர்ஷினி, மாங்குளம்

**வீரவேங்கை ஈழவேங்கை**
பொன்னையா - வதனி, முல்லைத்தீவு

**வீரவேங்கை கனியவள்**
கருப்பையா - சிவனேஸ்வரி, முல்லைத்தீவு

**வீரவேங்கை மதுஷா அல்லது மாதவி**
செல்வராசா - ஜெயந்தினி, யாழ்ப்பாணம்

**வீரவேங்கை அமுதினி**
இரத்தினசிங்கம் - சுபாசினி, முல்லைத்தீவு

**வீரவேங்கை கயல்விழி**
ஐயம்பிள்ளை - யோகேஸ்வரி, வவுனியா

**வீரவேங்கை பிரியங்கா**
தர்மரெட்ணம் - சுபாஜினி, வவுனியா

**கப்டன். சாரங்கன்**
மாரிமுத்து - கனகநாதன், திருகோணமலை

**கப்டன். வானரசன்**
கென்றிக் இக்மன் தோமஸ், யாழ்ப்பாணம்

**வீரவேங்கை அறிவுச் செழியன்**
பரசுராமன்- ஜெகதீஸ்வரன், முரசுமோட்டை

**2ம் லெப். ஞானப்பிரியன்**
கின்ஸ்லிசோதி - கனகையா, மட்டக்களப்பு

**2ம் லெப். மீனலோஜன்**
சின்னத்தம்பி - தங்கராசா, அம்பாறை

**2ம் லெப். மாறன்**
முத்துப்பிள்ளை - விஜயராசா, மட்டக்களப்பு

**2ம் லெப். மணியிசை**
ஆறுமுகம் - அசோக்குமார், மட்டக்களப்பு

**மேஜர் கண்ணன் அல்லது கவிக்கண்ணன்**
நாகமணி-சத்தியசீலன், மட்டக்களப்பு

**வீரவேங்கை யசோதா**
இராமச்சந்திரன் - விஜயராணி, முல்லைத்தீவு

**லெப். அசருபன்**
கந்தசாமி - பிரபாகரன், மட்டக்களப்பு

**வீரவேங்கை வேங்குயில் அல்லது இசைநிலா**
பியதாஸ் - சுமிதா, புதுக்குடியிருப்பு

**வீரவேங்கை குழலினி அல்லது நிரஞ்சனா**
பசுபதி - சுமித்திரா, யாழ்ப்பாணம்

**வீரவேங்கை கானகா**
அமலதாஸ் - அஜந்தா, முல்லைத்தீவு

**வீரவேங்கை கலைத்தென்றல்**
செல்வராசா - அதிஷ்டராணி, யாழ்ப்பாணம்

**லெப். தேன்கவி**
பாலசுப்பிரமணியம் - பவானி, யாழ்ப்பாணம்

**வீரவேங்கை சாந்தன்**
செல்லையா - வைகுந்தவாசன், வவுனியா

**வீரவேங்கை அலைமகள்**
சிவலு - வள்ளியம்மை, கிளிநொச்சி

**வீரவேங்கை நிலமகள்**
இராசநாயகம் - பத்மா, மாங்குளம்

**வீரவேங்கை சுகநங்கை**
நந்தகோபால் - ஜெயந்தினி, பூநகரி

**வீரவேங்கை இமைவிழி**
திலீப் செல்வராசா - ஆன்றொசானி, யாழ்ப்பாணம்

**வீரவேங்கை பவளக்கிளி**
சண்முகசுந்தரம் - மைதிலி, யாழ்ப்பாணம்

**வீரவேங்கை மதுஷா**
ரட்ணசிங்கம் - தனுஜா, யாழ்ப்பாணம்

**வீரவேங்கை தமிழிசை**
குணரெட்ணம் - கிருத்திகா, கிளிநொச்சி

**வீரவேங்கை காரழகி அல்லது புரட்சிகா**
செல்லமுத்து - செந்தமிழ்ச்செல்வி, கிளிநொச்சி

**2ம் லெப். பவளமதி**
கணபதி - மங்களரசி, கிளிநொச்சி

**மேஜர் நளன்**
வீரகத்தி - பாஸ்கரன், யாழ்ப்பாணம்

**மேஜர் தேசிகன்**
கந்தையா - லோகநாதன், யாழ்ப்பாணம்

**வீரவேங்கை குஜின்ரன் அல்லது இளநந்தன்**
இருதயநாதர் எட்வேட் யேசுநேசன், முல்லைத்தீவு

**வீரவேங்கை அருள்நிலா**
ஜெகராசா - கஜலட்சுமி, யாழ்ப்பாணம்

**கப்டன். பாலியன்**
மோகனதாஸ் - சுகந்தன், மட்டக்களப்பு

**2ம் லெப். தமிழவன்**
மயில்வாகனம் - சர்வானந்தம், மட்டக்களப்பு

**வீரவேங்கை இளமுகிலன்**
கந்தவேள் - ரவிச்சந்திரன், கிளிநொச்சி

**வீரவேங்கை கோவைநந்தன்**
நடேசன் பேனாட் - உதயகுமார், வவுனியா

**வீரவேங்கை வெற்றியரசி**
செல்வராசா - சந்திரகலா, கிளிநொச்சி

**வீரவேங்கை இன்னமுதன்**
செல்வரெட்ணம் - செல்வதீபன், யாழ்ப்பாணம்

**வீரவேங்கை புரட்சிவள்ளல்**
திருநாவுக்கரசு - ஜசீந்திரன், யாழ்ப்பாணம்

துணைப்படை வீரர்
**வில்பேட் - ஜோசப்,** முல்லைத்தீவு

*கடந்த 31-03-2000 அன்று ஓயாத அலைகள் -3 இராணுவ நடவடிக்கையில் 3 கரும்புலிகள் வீரச்சாவினைத் தழுவிக் கொண்டனர்.*

**மேஜர். மலர்விழி**
பாலகிருஸ்ணன் சங்கீதா, யாழ்ப்பாணம்

**மேஜர் ஆர்த்திகா அல்லது தாயகா**
விநாயகமூர்த்தி சுதர்ஜினி, யாழ்ப்பாணம்

**கப்ரன் சந்தியா**
கிருஸ்ணமூர்த்தி முகுந்தினி, யாழ்ப்பாணம்



# இழப்புக்களுக்கு அஞ்சினால் யுத்தம் நடத்த முடியாது



இன்று, தமிழீழத் தேசியத் தலைவரின் திட்டமிடல் நெறிப்படுத்தலில், சிங்களத்தின் ஆனையிறவுப் பெரும் தளம் விடுதலைப் புலிகளால் வெற்றிகொள்ளப்பட்டுள்ளது. சிங்களத்தின் குடாநாட்டுக்கான ஆக்கிரமிப்பு இருப்பு இந்தப் பெருந்தளத்திலேயே தொங்கிக்கொண்டிருந்தது என்பது வெளிப்படை. இந்தப் பெருந் தளத்தை வெற்றிகொள்ளவேண்டும் என்பது விடுதலைப் புலிகளின் நீண்டகால அவா என்பதுடன், விடுதலைப் போராட்டத்தின் பெருந் தேவை. இதனை வெற்றிகொள்ள, 1991ஆம் ஆண்டு, விடுதலைப் புலிகள், ஆகாய கடல் வெளி இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். இலக்கு வெற்றிகொள்ளப்படவில்லை என்றபோதும், விடுதலைப் போராட்டத்தில், புதியதொரு பரிமாணத்தை அந்நடவடிக்கை தோற்றுவித்தது. இலக்கு சாத்தியப்படாமல் போய்விட்ட அன்றைய ஆனையிறவு முற்றுகைச் சமர் குறித்து, தமிழீழத் தேசியத் தலைவர், 31.08.1991 அன்று, ஈழநாதம் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி, இன்றைய நாளில் மீட்டிப்பார்க்கவேண்டிய முக்கியம் பெறுகின்றது. அதனை களத்தில் வாசகர்களுக்காக இங்கு தருகின்றோம்.

*கே— ஆனையிறவுப் போர் பற்றி?*

பதி— மரபு ரீதியான இராணுவ அணியாக எதிரிகளுடன் நேரடியாக மோதி அழிக்கும் நிலையின் முதற்படி இது எனலாம். பெரிய அளவில் இறங்கிய இராணுவத்தை நீண்ட நாட்கள் தடுத்துள்ளோம். இராணுவ ரீதியில் பெருமளவு முன்னேறியிருக்கிறோம் என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

*கே— ஆனையிறவுப் போரில் ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து என்ன சொல்ல நினைக்கிறீர்கள்?*

பதி— இழப்புக்களுக்கு அஞ்சினால் யுத்தம் நடத்த முடியாது. இழப்புக்களை வளர்ச்சியின் ஊன்று கோலாகக் கருதவேண்டும். இத்தகைய இழப்புக்கள் போராளிகளினதும் பொது மக்களினதும் மனவுறுதியை வளர்க்கக் கூடியவை. ஆனையிறவுப் போர் தொடங்க முன்பே 300 பேர் உயிரிழக்க வேண்டிவரலாம் என்பதும் 900 பேர் வரையில் காயமேற்படலாம் என்பதும் எதிர்பார்க்கப்பட்டதே. ஆனையிறவுப் போர் ஆரம்பத்திலிருந்து 23-8-91ஆம் திகதி வரையிலான 43 நாட்களில் 564 போராளிகளை இழந்திருக்கிறோம். எதிர்பார்த்ததை விடவும் பெரிய அளவில் படையினர் இறக்கப்பட்டு நீண்ட நாட்கள் இடம்பெற்ற யுத்தத்தைப் பார்த்தால் எமது தரப்பிலான இழப்பு பெரிதெனச் சொல்ல முடியாது.

*கே— ஆனையிறவுப் போரின் நோக்கம் நிறைவேறாதது குறித்து......*

பதி— தரையிறக்கப்பட்ட இராணுவத்தினரை, எதிரியின் எறிகணைத் தாக்குதல், வான்வழித் தாக்குதல்கள் என்பவற்றிற்கு மத்தியில் எமது வீரர்கள் நீண்ட நாட்கள் எதிரிப்படைகளைத் தடுத்துத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர் என்பதை அவதானிக்க வேண்டும்.

*கே— ஆனையிறவுப் போரின்போது மக்கள் மத்தியில் காணப்பட்ட விழிப்புணர்ச்சி பற்றி........*

பதி— மக்கள் காட்டிய விழிப்புணர்ச்சி போராட்டத்திற்கும் புலிகளுக்கும் ஆதரவான விழிப்புணர்ச்சி என்பதை மறுக்க முடியாது. மக்கள் பலத்த கஸ்டங்களை எதிர்நோக்கி வருவதால் ஏக்கம் இருப்பது இயல்பு. எனினும் பொருளாதார நெருக்கடி, கஸ்டம் என்பவற்றிற்கு மத்தியிலும் ஆனையிறவுப் போரின் போது மக்கள் உணவுப் பொருட்கள் வழங்குவதில் காட்டிய ஆர்வம் மற்றும் ஈடுபாடு என்பனவற்றை நாம் மறந்துவிடமுடியாது. மக்கள் மத்தியில் கஸ்டம் இருப்பதை நாம் நன்கு உணருகின்றோம். இவற்றிற்கு ஊடாக போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது அவசியம் என்பதையும் மக்கள் புரிந்து கொண்டுள்ளார்கள் என்றே நம்புகின்றேன்.

*கே— ஆனையிறவில் தமக்கு பெரும் வெற்றி கிடைத்திருப்பதாக இராணுவம் கூறுகின்றதே. போர் உத்தி என்ற முறையில் பிழையான உத்தியொன்றை கையாண்டு விட்டதாகக் கருதுகின்றீர்களா?*

பதி— ஆனையிறவுப் போர் ஒரு பெரிய வெற்றியெனக் கூறுவது வெறும் பொய்ப் பிரச்சாரம். எமது வெற்றிகரமான தாக்குதல்களால் ஆனையிறவுத்தளம் வீழ்ச்சியடையும் நிலை இருந்தது. 800 இராணுவத்தினர் எமது முற்றுகைக்குள் சிக்கிக்கொண்டனர். இவர்களை மீட்பதற்காக 8000 பேர் கொண்டு பெரிய தாக்குதலை நடத்த சிங்கள அரசு நிர்ப்பந்திக்கப்பட்டது. இந்தத் தாக்குதலில் சிங்கள அரசுக்கு என்றுமில்லாத பெரிய இழப்புக்கள் ஏற்பட்டது. ஐந்து மைல் தூரம் படைகளை நகர்த்த 24 நாட்கள் தேவைப்பட்டன. இதனை வெற்றியென எக்காளமிடுவது சிறுபிள்ளைத்தனமானது. ஒரு பெரிய மரபுவழிப்போரை நேருக்கு நேர் எதிர்கொள்ளும் பெரும் வளர்ச்சியை புலிகள் இயக்கம் அடைந்துள்ளது. ஆனையிறவுப் போர் இதற்க்கு நல்லதொரு எடுத்துக்காட்டு.

*கே— புலிப்படையை மரபுவழி இராணுவமாக மாற்ற நீங்கள் எடுத்து வரும் முயற்சி பற்றிக் கூறுவீர்களா? இது புலிப்படையின் முன்னேற்றத்திற்கு எந்தளவிற்கு முக்கியமானது?*

பதி— சிங்கள அரசிற்கு எதிரான எமது ஆயுதப் போராட்டம் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலானது நீண்ட வரலாற்றைக் கொண்டது. இந்த நீண்ட வரலாற்றுப்போக்கில் நாம் படிப்படியாக பெரும் வளர்ச்சியடைந்திருக்கின்றோம். நீண்ட காலமாக கெரில்லா போர் முறையைக் கையாண்டு வந்த நாம் இப்போது மரபுவழி இராணுவமாக மாறி வருகின்றோம்.

இராணுவ ரீதியில் இது ஒரு பெரிய வளர்ச்சியைக் குறிக்கிறது. இந்த வளர்ச்சி எமது விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிதான். இந்த வளர்ச்சி மூலம் சிங்கள அரசு ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ்மக்களின் தேசியப் பிரச்சனைக்கு தீர்வு காணமுடியாது என்பதுதான் அது.

## ஒல்லாந்தர் கட்டிய ஆனையிறவுக் கோட்டை



யாழ் குடாநாட்டின் வாயிலில் வன்னிப் பெரு நிலப்பரப்பிலிருந்து வருகின்ற எதிர்ப்புக்களை கண்காணித்து முறியடிக்கும் நோக்கில் ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட கண்காணிப்பு கோட்டைகளில் முக்கியத்தும் மிக்கவற்றில் ஆனையிறவுக் கோட்டையும் ஒன்று. இதற்கு இன்னொரு பிரதான காரணமும் உண்டு ஒல்லாந்தரின் வருமானமிக்க யாழ் கோமாண்டரியின் வர்த்தகத்தை முற்று முழுதாக கட்டுப்படுத்தும் நோக்கிலும் ஒல்லாந்த ஆளுனராக இருந்த வான்கோயன்ஸ் காலத்தில் ஆனையிறவுக் கோட்டை கட்டப்பட்டது.

பிற்காலத்தில் இக்கோட்டையின் மேற்க்குப்புறப் பகுதி ஓய்வு விடுதியாக மாற்றப்பட்டது. வடக்கு நோக்கிய ஒரு கொத்தளமும், கிழக்கு நோக்கிய ஒரு கொத்தளமும் ஆக இரு பிரதான கொத்தளங்கள் கோட்டையை அரண் செய்தன. ஒவ்வொரு கொத்தளமும் நான்கு பீரங்கி சுடுதளங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தது. மொத்தமாக எட்டு பீரங்கிகள் பாதுகாப்பிற்காக நிறுத்தப்பட்டிருந்தன.

கோட்டைச் சுவர் மொத்த நீளம் 50 அடியாகும் வெளியே துருத்திக் கொண்டு நிற்கும் கொத்தளங்கள் ஒவ்வொன்றும் 30 அடி நீளமும் 8 அடி அகலமும் கொண்டவையாகும். உட்பிரகாரம் இரண்டரை அடி தடிப்புள்ள சுவரினால் கட்டப் பட்டிருந்தது. சுவரின் உயரம் 15 அடி உயரமானதாகும். 7 அடி உயரமுள்ள வளைவு மேலே அமைக்கப்பட்டது.

ஒல்லாந்தரின் பின்னர் ஆங்கிலேயர் கரங்களுக்கு மாறிய கோட்டையும் விடுதியும் பின்னர் சிறீலங்கா சுங்க இலாகாவினதும் வனத்துறையினரதும் கட்டுப்பாட்டிலிருந்தது. தமிழர் மத்தியில் விடுதலைப்போராட்டம் முளைவிடத் தொடங்கியதும் சிறீலங்கா இராணுவத் தடைமுகாமாக மாறி பெருந்தளமாக பின்னர் உருவெடுத்து. யாழ்குடாவை பெரு நிலப்பரப்போடு தொடர்புகளைப் பேணுவதற்கு தடுத்துக் கொண்டு நின்றது.

கடந்த ஏப்பிரல் 22ஆம் திகதி ஆனையிறவுப் பெருந்தளம் தமிழீழ விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டது. மூன்று நூற்றாண்டுகளாக அந்நியர்கள் கோட்டைகள், அரண்கள் அமைத்து தளமிட்டு நின்ற ஆனையிறவுப் பகுதி மீண்டும் தமிழர் கைகளில் வந்துள்ளது.



**மாவீரர்களின் உதிரத்தால்**
**புனிதப்பட்டுப்போன எங்கள் புனிதபூமி**
**நண்பர்களை உள்ளக்கிளர்ச்சியுடன்**
**வரவேற்கும்.**
**பகைவர்களானல் வெறுக்கும்.**
**எம்மண்ணின் புனிதம் கெடுவதை**
**எம்மண்**

**ஒருபோதும்**
**அனுமதிப்பதில்லை.**
**ஆக்கிரமிக்க எண்ணும் எந்தப்**
**பகைவனையும்**
**வெளியேறப் பணிக்கும்.**
**முடியவில்லையானல்**
**பாடையில் அனுப்பிவைக்கும்.**

## ஆனையிறவில் அள்ளப்பட்ட பீரங்கிகளிற் சிலவற்றின் தரவுகள்

### 152 MM நீண்ட தூர ஹோவிற்சர் ஆட்லறி பீரங்கி (Howitzer Artillery)



- மொத்த நிறை: 7000kg
- கையாளுவதற்கு தேவையான படையினர்: 6பேர்
- ஆகக்கூடிய சுடுதூரம்: 24.7km
  ஆக்ககூடிய சுடுநேர இடைவெளி: RDS/minute-8min
- பிரயாணத்தின்போது நிலையெடுத்து சுடுதலை மேற்கொள்ளக்கூடிய நேரம்: 2.0_2 நிமிடங்கள்
- திருப்பக்கூடிய கோணம்
  பக்கவாட்டாக: ± 28°
  நிலைக்குத்தாக: 3.5.....+70°

### 120 MM மோட்டார் (Towed Motor)



- கலீபர்:120mm
- சுடுகலனின் நிறை: 80 kg
- பைபோட்: 70 kg
- இழுவை வண்டி: 512 kg
- சுடுகலனின் நீளம்: 1940 mm
- ஏற்றக் கோணம்: 800–1422 mils
- ஏவு குண்டின் நிறை:He–13.2 kg
  Wp–12.8 kg
- குறுக்குக் கோணம்: 240 mils
- ஆகக்கூடிய சுடுதூரம்: 6.5 km
- குறைந்த சுடுதூரம்: 400 M

### 122 MM ஹோவிற்சர் ஆட்லறிப் பீரங்கி Towed Howitzer



- கலீபர்: 121.98 mm
- குண்டு வெளிவரும் வேகம்: 515 m\s
- ஆகக்கூடிய சுடுதூரம்: 11.8 கிமீ
- குறைந்த சுடுதூரம்: 5.4 கிமீ
- சுடுவேகம்: 5–6 எறிகணைகள்/1min
- திருப்பக்கூடிய கோணம்:
  நிலைக்குத்தாக: -3°~+63·5°
  பக்கவாட்டாக– 49°

# ஓயாத அலைகள் -3 வட போர்முனை

அனைத்தும் அந்தரத்தில் சுழல, அடித்துப் போனது புயல்மழையொன்று. ஆண்டாண்டுகளாக உயிரை உருக்கி சேர்த்துவைத்த எல்லாமே அள்ளுண்டு போனது. நாளைய இருப்புங்கூட அப்படியாயிற்று. வெட்டிமுழங்கிய புயல்மழை வேகம் தணிய, இன்னுமிருப்பவர்கள் எழுந்துநின்று எஞ்சியிருப்பவற்றை ஏக்கத்துடன் பார்க்கிறார்கள். நாளை பற்றிய அவர்களின் கேள்வி இருளாகத் தெரியும் கணப்பொழுதது. அப்பொழுதும் அறிவிப்பு வருகிறது. தாழமுக்கம் தணிந்துபோகவில்லையாம், புயல் தொடரும் என்று, தங்கள் இருப்புப் பற்றிய அவர்களின் எண்ண மோதல்கள் எப்படியிருக்கும்? அப்படித்தானிருந்தது, எம் அழிவில் ஆனந்தங்கொண்டாடிவந்த பகைவர்களுக்கு; ஓயாத அலைகள்- 3 கட்டம் 11 முடிந்ததும் அலைகள் ஓயாத செய்தி கேட்டபொழுது.

எங்கள் தேசத்திற்கும் ஒருகாலம் இப்படித்தானிருந்தது. முன்னேறிப்பாய்ச்சல், பின் சூரியக்கதிர்கள், கிழக்கில் பொங்கும் கடலலைகள், உண்மைவெற்றிகள் (சத்ஜெய), எடிபல, வெற்றிஉறுதி, சூரியபலம், போர்முழக்கங்கள், நீர்ப்பிரவாகம் (வோட்டசெற்) என்று நாலாதிசைகளிலும் புயல்கள் வீசின, எங்கள் நிலையும், அதுவாயானது. நாங்களொன்றும் 'பீனிக்ஸ்' பறவையல்ல. இழந்த வாழ்வை மீளப் பெறுவதற்கு இருப்பதை இழக்கத் தயாராகாமல் புயலுக்குள் வாழப்பழக்கிக்கொண்டதெம் தேசம். உண்மைதான், போர்ப்புயல் வாழ்வில் பழக்கப்படுத்தப்பட்டது. புயல்கள் பற்றிய அச்சம் எமக்கினியில்லை. இழந்ததைப் பெறுவதற்காய் இடியென எழுகிறது புயல்களைத் தாங்கிய தேசம் இதன் பிரவாகத்தில் அனைத்துமே பிய்த்தெறியப்படும். அதன் பெயர் 'ஓயாத அலைகள்- 3'

ஓயாத அலைகள் - 3 கட்டம், 1, 11 இல் ஆண்டுகளாக பகைவர் ஆக்கிரமித்ததையெல்லாம், நாட்கணக்கில் படைத்தளங்களை நசுக்கி நம் தேசத்தை மீட்டெடுத்துக் கொண்டனர் தாய்நாட்டின் புதல்வர்கள். ஆயிரக்கணக்கில் உயிர்களைவிட்டு எம்நிலம் பிடித்தவர்களின் உயிர்களையெடுத்து அவர்தம் நிலம் விரட்டினர் புலிகள். வன்னியின் தென்கள முனையில் மூன்று திக்குகளிலும் மூண்ட போரில் கோட்டையென எழுந்துநின்ற படைத்தளங்கள் குட்டிச்சுவரென கருகிப்போக, ஓயாத அலைகளின் முடிவுத்தேதிக்காக ஏங்கியிருந்தார்கள். முன்னர் ஒரு தேசத்தின் முடிவுத்தேதிக்காக காத்திருந்த அதே மனிதர்கள். ஒருகாலம் எங்கள் மரணங்களால் மகிழ்ந்துகழித்தவர்கள் இவர்கள்தான். ஒரு வெடியோசையால் எம் உயிர்களைச் சிதைத்து, உடல்களைச் சிதைத்து, எஞ்சியவனின் மனங்களைச்சிதைத்து, தமிழரின் வாழ்வைச் சிதைத்தவர்களும் இவர்கள்தான். ஒற்றை வெடியோசையில் எத்தனை குழந்தைகள் அநாதைகளாயின! எத்தனை குடும்பங்கள் அநாதரவாயின! அவற்றின் அழுகுரல்களில் ஆனந்தம் கொண்டவர்களும் இவர்கள்தான். எழுகின்ற சூரியனை எங்கள் தேசத்திற்கு மட்டும் மறைத்துவிட முடியாவிட்டாலும், எம்மை இருளிலிருத்த ஏற்பாடு செய்தவர்களுமிவர்கள்தான். இவர்கள்தான் இப்பொழுது தங்கள் மரணங்களுக்காக காத்திருந்தார்கள். இம்முறை எம்மரணங்கள் நிச்சயமென்றுசொன்ன மேலதிகாரிகளின் வார்த்தைகளில் நம்பிக்கையற்றவர்களாக.

'எங்கள் வருகைக்காக எதிரி காத்திருக்கிறானென்பது எமக்குத் தெரியும். எமது உடல்களை எண்ணிவிட அவனுக்குக் கட்டளை வந்திருப்பதும் தெரியும். இருந்தாலும் இந்த வெற்றிலைக்கேணித் தளத்தை இன்று இரவு தொடங்கும் சமரில் வெற்றிகொள்வோம். இதை வெற்றிகொண்டேயாக வேண்டும்' என்று பகைத்தளத்தில் பாயப்போகும் புலிகளுக்கு போதித்தார் இச்சமர்முனைத் தளபதி கேணல் கருணா. தலைவர் வழிநடத்தும் ஓயாத அலைகள் -3 இன் - கட்டம் 111 இன் தொடக்கம் இதுதான்.

டிசம்பர்10ஆம் திகதி இருட்பொழுதில் எம் வருகைக்காக காத்திருக்கும் பகைவர்களுக்கு மரணத்தைப் பரிசளிப்பதற்காக புலிகள்சேனை நகர்ந்தது. லெப்.கேணல் கெங்கா தலைமையில் அன்பரசி படையணி உட்பட, ஜெயந்தன் படையணி, சிறப்பு எல்லைப்படை வீரர்களைக் கொண்ட படைத்தொகுதி தளபதி லெப். கேணல் ராபட்டின் வழிநடத்தலில் களமிறங்கியது. இதேநேரம் தளபதி கேணல் சூசையின் கட்டளையின் கீழ் பெருங்கடலிலும், நீரேரியிலும் களம் தொடங்க தாக்குதற் படகுகளோடு தயாராகிக்கொண்டனர் கடற்புலிகள்.


மாரிகாலம் வன்னியில் முடிந்துபோகவில்லை, வானம் இருள்மண்டிக் கிடந்தது. வழமையைவிட கடலலையின் வீச்சம் அதிகமாகவிருந்தது. நீரேரியில் நீர்மட்டம் உயர்ந்திருந்தது. இவையெல்லாம்கூட எதிரி தனக்கான பாதுகாப்பரண்களென்றே எண்ணியிருந்தான். இழந்ததைப் பெற்றுக்கொள்வதற்கான ஆத்மாவின் ஆவல், சுதந்திரத்தின் தேடல் எந்தத் தடையையும் உடைக்காதா என்ன? பகைவர்கள் இதைப் புரிந்துகொள்ளச் சாத்தியமில்லைத்தான். ஏனெனில், இழந்தது அவர்களில்லை; நாங்கள்தான். அதனால்தான் கழுத்தில் சாவைக் கட்டிப் போராடுகின்றோம். விடுதலை உணர்வைவிட ஆக்கிரமிப்பு வெறிக்கு சக்தி அதிகமாயிருப்பின் எங்கள் தேசம் அழிந்து நீண்டகாலமாயிருக்கும். விடுதலையை வென்றெடுக்கும்வரை ஓயமாட்டோமென்பதை அவலத்தை எம் தேசத்திற்குப் பரிசளித்த அவர்களுக்கு மீண்டுமொருமுறை உணர்த்த ஓயாத சமர் தொடங்கியது, கட்டம் - 111 என்று.

கட்டைக்காடு, புல்லாவெளி இராணுவத் தளங்களைக் காவலிட்டிருந்த முன்னரங்கக்காவலரண் தொடரின் நடுப்பகுதியில் முதலுடைப்பு நடந்தது. எதிரி அமைத்த தடைகளை வீரத்தைக்கொண்டு வெட்டியெறிந்தார்கள் புலிவீரர்கள். முடியாதபோது தம்முயிரைக்கொண்டு உடைத்தெறிந்தார்கள். லெப். கேணல் வண்ணக்கிளியின் ஒருங்கிணைப்பில் பீரங்கிப்படையணி *'பற்றிக்' களின் சூட்டாதரவுடன் எதிரியின் காவலரண்களைத் தகர்த்து முன்னேறியது புலிகள்சேனை.

திட்டத்தின்படி அப்படைத்தொகுதி இரண்டாகப் பிரிந்து செயற்படத் தொடங்கியது. கட்டைக்காடு பிரதான இராணுவத் தளத்தை நோக்கி ஒரு படைத்தொகுதியும், புல்லாவெளி பிரதான இராணுவத்தளத்தை நோக்கி மறு படைத்தொகுதியுமாக எதிரிக் காவலரண்களைத் தகர்த்தெறிந்து மினிமுகாங்களை வெற்றிகொண்டு முன்னேறினர் புலிகள். நீரேரியில் எதிரி அமைத்திருந்த காவலரண் தொடரை தகர்த்தழிக்க கடற்புலி லெப். கேணல் மங்களேஸின் தலைமையில் ஒரு படகுத் தொகுதி ஈடுபட்டது. கட்டைக்காடு இராணுவதளம்வரை முன்னேறிய புலிகள் தளத்தில் எதிரியை நெருங்கித் தாக்கினர். கடற்கரையில் நிமிர்ந்து நின்ற தேவாலயத்தில், கப்பலேந்தி நின்ற மாதாவை காணாமற் செய்த அந்த பகைவர்கள் வெற்றிகொள்ளப்பட்டனர். கோவிலில் முகப்பு மட்டும் சுவர்களற்று ஒடிந்துபோய் இன்னுமிருந்தது; அந்த ஊர்மக்களின் சிதைக்கப்பட்ட வாழ்வைப் போலவே.

வெற்றிகொள்ளப்பட்ட படைத்தளத்தில் எதிரியுடல்களைக் கடந்து வெற்றிலைக்கேணி பிரதான இராணுவத்தளத்தை நோக்கி முன்னேறியது அப்படைத்தொகுதி. இதனுடன் புதிதாக இணைக்கப்பட்ட கடற்புலிகளின் தாக்குதலணியும் இணைந்து நகர, பெருங்கடலிலும் கடற்புலிகள் தாக்குதற் படகுகளோடு களமிறங்கினர். கடற்புலிகளின் படகுத்தொகுதிகள் இருவேறு இலக்குகளுக்காக நியமிக்கப்பட்டன.

*பலகுழல் பீரங்கி



லெப். கேணல் அமுதசுரபியின் தலைமையிலிருந்த கடற்புலி மகளிர் தாக்குதல் படகு உட்பட ஒரு படகுத்தொகுதி லெப். கேணல் ரஞ்சனின் வழிநடத்தலில் இக்கடற்தளத்தின் கரையோரத்திலிருந்த நீண்ட காவலரண் தொடரைத் தாக்குவதற்காகக் களமிறக்கப்பட்டது. அதேநேரம் பெருங்கடலிலிருந்து சிறீலங்காக் கடற்படை இத்தளத்தைத் தக்கவைப்பதற்காக எடுக்கப்போகும் முயற்சியை முறியடிப்பதற்கு லெப். கேணல் ராவணனின்



தலைமையிலான படகுத் தொகுதியொன்று காவலிட்டு நின்றது. நீரேரியிலும், பெருங்கடலிலும் நடைபெறும் சமர் நடவடிக்கைகளுக்கு தளபதி கேணல் சூசை கட்டளை வழங்கினார்.

வெற்றிலைக்கேணிப் படைத்தளம் அப்பகுதிக்கான வெறும் ஆக்கிரமிப்பு மட்டுமல்ல. இதன் முக்கியத்துவம் பல்வேறு பரிமாணம்கொண்டது. ஒன்று, வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு தரைத்தொடர்பைக் கொண்டிருக்கும் இரண்டு பாதைகளில் ஒன்றைத்தடுத்துநிற்பது இது. இரண்டாவது, யாழ்ப்பாணத்தின் மறுதரைத்தொடர்பான ஆனையிறவை அடைந்திருக்கும் இராணுவ கூட்டுத்தளத்தின் பாதுகாப்பும், பலமும் வெற்றிலைக்கேணித்தளத்தின் இருப்பில் தங்கியிருந்தது. ஏனெனில் இதன்மூலம் இப்படைத் தளத்திற்கான கடற்தொடர்பை பேணமுடிவதுடன் பக்கவாட்டாக புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தலைத் தவிர்த்து ஆனையிறவு தனிமைப்படுத்தலையும் தவிர்த்துக்கொள்ள முடியும். மூன்றாவது, கடற்புலிகளின் இயக்கத்தை வெற்றிலைக்கேணி கடற்தளத்தைப் பேணினால்மட்டுமே கட்டுப்படுத்தமுடியும். யாழ்ப்பாண இராணுவத்திற்கான ஒரேயொரு விநியோகப் பாதையான கடற்பாதையின் பாதுகாப்பு இப்படைத்தளத்திலேயே தங்கியிருந்தது.

முடிவாக, யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தின் பாதுகாப்பென்பது, இப்படைத்தளத்திலேயே பெரும்பங்கு தங்கியிருந்தது. எனவே, எம்மண் சுமக்கும் அவலத்திற்கு இப்படைத்தளத்தின் கேந்திர நிலையம் முக்கியமானது. இதனைக்காவலிட்டு நின்ற சிங்களத்தின் வீரர்களும் முக்கியமானவர்கள்தான். அவர்களது அழிப்பில்தான் எமது உயிர்ப்பு இருக்க முடியுமென்பதால்.

தரையால் ஒரு படைத்தொகுதி எதிரியைத்தாக்கி முன்னேற, கடலால் ஒரு படகுத்தொகுதி தொடர் தாக்குதலிலீடுபட ஒரு கத்தரிக்கோலைப்போல செயற்பட்ட புலிகளின் தரை, கடல் படையணிகளின் தாக்குதலால் எதிரிகள் வீழ்த்தப்பட்டார்கள். உயரக்கடலில் நின்ற தாய்க்கப்பல் கட்டளையிட முன்னேறின கடற்படையின் எட்டு டோறாப்படகுகள்.

இதை எதிர்பார்த்து காவலிட்டு நின்ற கடற்புலிகள் கடற்படையினரை எதிர்கொண்டனர். கொந்தளிக்கும் கடலில் இரண்டு படைகளின் வெற்றி தோல்விக்கான கடுஞ்சமர் நடந்தது. எதிரியின் போர்ச்சாதனங்கள்,



கடற்கலங்கள் வலுவுள்ளவையாக இருக்கலாம். ஆனால், சாதனங்களால் மட்டுமே போர் வெற்றிகொள்ளப்படுவதில்லை. அதற்கும் மேலால், அதைத் தாங்கிநிற்கும் மனிதர்களின் மனோவலிமையிருக்கிறது. அதுவே ஒருவகையில் கருவியின் பயன்திறனைக்கூட தீர்மானிக்கிறது. அங்கு நடந்த கடற்சமரில் எம் வீரர்கள் வென்றார்கள். பகைவர்கள் பின்வாங்கினர். தனிமைப்படுத்தப்பட்ட வெற்றிலைக்கேணித்தளம் அன்று பிற்பகற்பொழுதில் எம்மால் வெற்றிகொள்ளப்பட்டது. வெற்றிலைக்கேணி கடற்தளம் அமைந்திருந்த புவிநிலைகருதி (முனைப்பிரதேசம்) தெற்காக முல்லைத்தீவைக் கடந்தும், வடக்காக பருத்தித்துறை வரையும் கடற்புலிகளின் நடமாட்டத்தை அவதானிக்கவும், கட்டுப்படுத்தவும் (றாடர் கருவிமூலம்) முடியுமாக இருந்தது சிங்களக் கடற்படைக்கு. ஆனால் இப்போது வெற்றிலைக்கேணியின் இழப்பு முல்லைத்தீவு, வெற்றிலைக்கேணி உட்பட ஒரு பெரும் கடற்பரப்பை பாதுகாப்பாக கடற்புலிகளிடம் மீட்டுக் கொடுத்துள்ளது. இத்தளம் மூலம் கடற்படைக்கிருந்த அவதானிப்பு அனுகூலமும், தாக்குதல் அனுகூலமும் புலிகளின் கைகளிற்கு மாறியிருக்கின்றது. இதனால் கடற்படையும், யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவமும் தமது பாதுகாப்பின் பலத்தைக்கூட இழந்துவிட்டிருப்பதுடன் கடற்புலிகளின் பலம் உறுதியான நிலையை அடைந்துள்ளது.

## 12-12-99
## மேலும் இரு சமர்முனை

இச்சமரை நேரடியாக வழிநடத்தும் தலைவர் திட்டத்தின்படி மேலும் இரு சமர்முனைகளைத் தொடங்குவதற்குக் கட்டளையிட்டார். ஒன்று, கேணல் பால்ராஜின் கட்டளையின் கீழ் ஒரு படைத்தொகுதி. வெற்றிலைக்கேணிக்கும், இயக்கச்சிக்குமிடையிலான இராணுவ வலயத்தில் எதிரிகளைத் தாக்கியழித்து முன்னேறி இயக்கச்சிப் பகுதியில் தடுப்பரண்களை அமைக்க வேண்டும். இழந்த பிரதேசத்தை மீளக்கைப்பற்ற எதிரி தயாராகுமுன், எதிரியைத்தாக்கி இயக்கச்சி - ஆனையிறவு கூட்டுத்தளத்திற்குப் பின்வாங்க வைப்பது இதன் அடிப்படைத் தேவையாக இருந்தது.

எனவே மாலதி படையணி முள்ளியான் இராணுவத்தளம் நோக்கி முன்றே, யாழ் படையணியுடனான மாலதி படையணியின் ஒரு அணிகொண்ட படைத்தொகுதி மண்டலாயூடாக இயக்கச்சி நோக்கி முன்னேறியது. முள்ளியான் நோக்கி முன்னேறிய மாலதி படையணி, எறிகணைத்தளமும், இரண்டாவது 'கெமுனுவோச்' பற்றாலியன் தலைமையகமும் அமைந்திருந்த அப்படைத்தளத்தைத் தாக்கி எதிரிகளை வெற்றிகொண்டது.

வெற்றிலைக்கேணியிலிருந்து பின்வாங்கிய எதிரிகள் மீள் ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்த இத்தளம் எமது கைகளில் வீழ்ந்தது.


அதே நேரம், லெப். கேணல் மகேந்தியின் தலைமையில் முன்னேறிய படைத்தொகுதியை மண்டலாயில் தடுத்து நிறுத்தி சண்டையிட்டது எதிரிகள் படை. உள்நோக்கிய எமது முன்னேற்றம் தமது இருப்புக்கு அச்சுறுத்தலாகி விடுமென்று உணர்ந்த எதிரிப்படைத்தலைமை, அதைத்தடுத்து நிறுத்த போரிடுமாறு தன் படைக்கு கடுமையான கட்டளையை வழங்கியிருந்தது. மண்டலாயில் மூண்ட கடுமையான சண்டையால் 50க்கு மேற்பட்ட எதிரிகள் தமது உயிர்களை இழக்க நேரிட்டதைத் தவிர அவர்களால் சாதித்துக்கொள்ள முடியவில்லை. எதிரியின் உடல்களைக் கடந்து அப்படைத்தொகுதி மேலும் முன்னேறியது. முள்ளியானிலிருந்து மற்றைய படைத்தொகுதியும் முன்னேறியது.

இன்று தொடங்கிய இரண்டாவது சமர்முனை சாவகச்சேரிக்குத் தெற்கே உள்ள கேரதீவு, அறுகுவெளி நோக்கியது. வன்னி - யாழ்ப்பாணத் தொடர்பை துண்டித்திருந்த சங்குப்பிட்டி - கேரதீவு கடல்நீரேரியைக் கடந்து கேரதீவு கடற்தளத்தை கைப்பற்றிப் பாதுகாப்பது இதன் இலக்காக இருந்தது. சாவகச்சேரியிலிருந்து சில கிலோமீற்றர் அண்மையிலிருக்கும் இப்பிரதேசத்தை மீட்பதன் மூலம் சங்குப்பிட்டி - கேரதீவு தொடர்பைப் பேணுவது நோக்கமாக இருந்தது. இச்சமர்முனையில் மாலதி படையணி, ஜெயந்தன் படையணி, இம்ரான் - பாண்டியன் படையணி ஆகியவற்றின் அணிகளைக்கொண்ட படைத்தொகுதி களமிறங்கியது.

காலை 10 மணியளவில் லெப். கேணல் வீமனின் தலைமையில் கிழக்கரியாலையிலும், அறுகுவெளியிலும் இருவேறு பிரிவுகளாக தரையிறக்கப்பட்டது இப்படைத்தொகுதி. எதிரியைப் பொறுத்தவரை நீரேரிகடந்த எமது முன்னேற்றம் சாத்தியமில்லையென்றே நம்பியிருந்தான். ஏனெனில் அதைத் தடுப்பதற்காக அவன் ஏற்படுத்தியிருந்த பலம் வலுவானது. கிளாலி, கேரதீவு, கோயிலாக்கண்டி, குருநகர் ஆகிய இடங்களிலமைந்திருந்த கடற்தள 'றாடர்' சாதனங்களை மீறி எம்மால் நகர்ந்துகொள்ள முடியாது. அப்படியான எமது நகர்வை முறியடிப்பதற்காக சிறப்புப் பயிற்சிபெற்ற விசேட படகுப்படைப்பிரிவு (SBS) நிலை - நிறுத்தப்பட்டிருந்தது. இவற்றை மீறி எமது நகர்வு நடந்துவிட்டால் அவற்றை முறியடிப்பதற்கான படைத்தளங்களும் மீண்டும் பின்வாங்க முடியாதபடி கடற்படையின் தடுப்பும் இருக்குமாறு எதிரி ஒரு ஏற்பாட்டைச் செய்திருந்தான். இத்தகைய எதிரியின் எதிர்பார்ப்பை முட்டாள்த்தனமாக்கி எமது அணிகள் முன்னேறியிருந்தன.

மேஜர் பாலனின் கிட்டு பீரங்கிப்படையணி, 'பற்றிக்' சூட்டாதரவை வழங்க, லெப்.கேணல் சேரமான் தலைமையில் கடற்புலிகள் முன்னேறும் படையணிகளைத் தரையிறக்கினர். வரப்போகும் விசேட படகுப் பிரிவை (SBS) எதிர்கொள்ள கடற்புலிகள் காத்திருந்தனர். தரையிறங்கிய அணிகள் முன்னேறித் தாக்குதலிலீடுபட்டன. ஒரு அணி அறுகுவெளியிலமைந்திருந்த இராணுவ முகாமை வெற்றிகொள்ள, மறுஅணி கேரதீவு கடற்தளத்தை நோக்கி முன்னேறி அதைத் தாக்கியழித்து வெற்றிகொண்டது. 'றாடர்' சாதனம் உட்பட ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. அன்று மாலைக்குள் கேரதீவு, அறுகுவெளியுள்ளிட்ட ஒரு நிலப்பரப்பைத் தக்கவைத்து சங்குப்பிட்டியூடாக ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டதை உறுதிப்படுத்திக்கொண்டது அப்படைத்தொகுதி.

இன்று மாலை, கேணல் கருணாவின் கட்டளையில் இயங்கிய சமர்முனையில் புல்லாவெளி நோக்கி முன்னேறியிருந்த படைத்தொகுதி சண்டையைத் தொடங்கியது. உதவிக்குவந்த படையினரைத் தாக்கியழிக்க நீரேரியிலமைந்திருந்த காவலரண்களை கடற்புலிகள் தகர்த்தழிக்க அப்படைத்தளத்தை வெற்றிகொண்டனர் புலிகள்.



தனது படையின் பலத்தாலும், இயற்கையாக அமைந்த புவியியல் சாதகத்தாலும், ஆக்கிரமிப்பின் உறுதிப்பாட்டில் இறுமாந்திருந்த பகைவரின் படைத்தலைமை ஒரே சமயத்தில் மூன்று முனைகளில் இயங்கும் இச்சமருக்கு முகங்கொடுக்க முடியாது திணறியது. தொடங்கப்பட்ட ஒவ்வொரு சமர்முனை நோக்கங்களும் அறியப்படாமல் எதிரி திக்குமுக்காடினான். தனது படைவலுவை எந்த முனையில் நிறுத்திச் சண்டையிடுவதென்பதில் எதிரி குழப்பமடைந்தான். பன்னிரெண்டாம் திகதி இருண்டது பகைவர்களது மனங்களுங்கூட அப்படித்தான்.

## 13-12-99

வெற்றிலைக்கேணியை வெற்றிகொண்ட படைத்தொகுதி இத்தளத்தின் பாதுகாப்பிற்காகத் தொடர்ந்து முன்னேறியது. எதிரியை நிலையெடுக்கவிடாது வேகப்பின்தொடர்வைச் செய்த இப்படைத்தொகுதி ஆழியவளை மினிமுகாமையும் தாக்கி அப்பிரதேசத்தையும் மீட்டெடுத்துக்கொண்டது.

இன்றைய நாளில் புல்லாவெளியிலிருந்து முன்னேறிய படைத்தொகுதியும் மண்டலாயூடாக முன்னேறிய படைத்தொகுதியும் வாடியடிச் சந்திவரை எதிரிகளை விரட்டின. எதிரி வலுவான தற்காப்பரண்களை நெருங்கவிடாது அமைத்திருந்தபோதும் அலைகளின் வீச்சில் அது அள்ளுண்டு போனது.

## 14-12-99, 15-12-99

தொடர்ந்த இவ்விரு நாட்களில் சண்டையிட்ட அணிகளுக்கு ஓய்வு வழங்கப்பட்டு மீளொழுங்குபடுத்தப்பட்டது. சண்டையின் தீவிரத்தில் சரியாகச் சாப்பிட்டிராத போராளிகளுக்கு பெற்றவர்களைப் போல தங்கள் வயிற்றைக்கட்டி, வாயைக்கட்டிக்கூட மக்கள் செய்தனுப்பிய உலருணவுகள் கைகளில் கிடைத்தது.



தனங்கிழப்பு, இயக்கச்சிப் பகுதிகளில் சாப்பாடு சரியாகக் கிடைப்பதுகூட அப்போது சாத்தியப்படாதிருந்தது. இந்த உலருணவுதான் வயிற்றுப் பசிக்கு தீர்வு கண்டது. களத்திற்கு தன் பிள்ளையிடம் உலருணவு கொடுத்தனுப்பிய தாய் தன் பிள்ளையைக்கூட இழந்திருந்தாள். அந்த உலருணவின் பெறுமானம் எத்தனை பெரியது.

தளத்தில் வெற்றியின் சந்தோசம் ஒருபுறம், வீரச்சாவு நிகழ்வுகளின் துயரமொருபுறம், இதற்கு நாளும் இரத்தம் வழங்குவது, உலருணவு திரட்டுவது, வீதி திருத்துவது என்ற அவசர வேலைகள் ஒருபுறமாக மக்கள் திரிந்தார்கள். எல்லைக்குப் போவதற்குத் தயாராகும் எல்லைப்படை வீரர்களும், காயமடைந்துவந்த எல்லைப்படை வீரர்களும் மக்களின் கவனத்திற்குரியவர்களாயினர். தளத்தில் ஒரே ஆரவாரம். தம்புதல்வர்களின் வீரம்செறிந்தபோர் இத்தனை மகத்தான வெற்றிகளையீட்டுவது அவர்களுக்குப் பிரமிப்பைக் கொடுத்தது ஓயாத அலைகள் -3 ஐ தலைவர் நேரடியாக வழிநடத்துகிறாரென்பதில் அதிக உற்சாகம்வேறு அவர்களுக்கு.

## 16-12-99 நான்காவது சமர்முனை.

இரண்டு பிரிகேட்கள் நிலைகொண்டிருந்த முக்கியத்துவம் வாய்ந்ததும், மிகப் பலப்படுத்தப்பட்டதுமான பரந்தன் முதல் உமையாள்புரம் வரையிலான பகுதியில் சமரை வழிநடத்த தளபதி கேணல் தீபன் தலைவரால் நியமிக்கப்பட்டார்.

பரந்தன் வயற்பூமியால் சூழப்பட்ட சிறுநகரம், விவசாய மக்களுக்கேயுரிய அமைதியும், எளிமையுமான வாழ்வைக் கொண்ட பூமியது. இங்கு இரசாயன தொழிற்சாலை நிறுவப்பட்டதன்பின் பரந்தன் மேலும் களைகட்டியிருந்தது. அந்த அழகிய அமைதியான பூமியின் ஆடை அவிழ்க்கப்பட்டு ஆண்டுகளாகிவிட்டன. அந்த நீசர்கள்தான் அந்நிலத்தின் அசிங்கமாய் நின்றார்கள். அவர்களின் கொலைக்கரங்கள் இரண்டடி கொண்டவையல்ல. ஆட்லறியின் தூரவீச்சு எவ்வளவோ அதுவே அவர்களின் கொலைக்கரத்தின் நீளமும். எனவே கிளிநொச்சி, உருத்திரபுரம் முரசுமோட்டையென மூன்று திக்கிலும் மக்கள் தம் வாழ்வை இழந்தனர். இப்பொழுது அப்படைத்தளத்திற்கான சண்டைகள் தொடங்கப்பட்டாயிற்று. அம்மக்களின் வாழ்வின் ஜீவஊற்றுத் தெரியும் நேரமிது.

டாங்கியணியின் தாக்குதலுதவியோடு மேஜர் தர்சனின் ஒருங்கிணைப்பினாலான பீரங்கிப் படையணி 'பற்றிக்' களின் சூட்டாதரவோடு சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியும் லெப். கேணல் மைதிலியின் மாலதி படையணியும் இணைந்த ஒரு படைத்தொகுதி லெப். கேணல் இராஜசிங்கனின் தலைமையில் முல்லை - பரந்தன் வீதியால் முன்னேறியது. கண்டிவீதியால் லெப். கேணல் விமலின் தலைமையில் இதே படையணிகளைக்கொண்ட மற்றுமொரு படைத்தொகுதி முன்னேறியது. புலனாய்வுத் துறை தாக்குதற் படையணி லெப். கேணல் அறிவின் தலைமையில் இவ்விரண்டு வீதிகளுக்குமிடையிலான பிரதேசத்தில் முன்னேறியது. திட்டத்தின்படி நண்பகல் 1 மணிக்கு சண்டையைத் தொடங்கி எதிரிக்காவலரண்கள் வெற்றிகொள்ளப்பட்டு தமக்குள் இணைப்பையேற்படுத்திக்கொண்டன படைத்தொகுதிகள்.

அன்று இரவுக்குள் திட்டத்தின் முதலிலக்கு பூர்த்திசெய்யப்பட்டு, அடுத்த நகர்வுக்கான ஒழுங்குகள் நடந்துகொண்டிருந்தன. எதிரி பின்னால் உள்ள வீதியில் புதிய அரண்களை அமைத்து நிலையெடுத்தான். நாம் மேற்கொண்டு முன்னேறாதது எமது இயலாமையென எதிரிப்படையதிகாரி எண்ணியிருக்கவேண்டும். அல்லது தன் பலத்தில் அதிக நம்பிக்கைகொண்டிருக்க வேண்டும். ஏனெனில் கேணல் தீபனின் தொலைத்தொடர்பு அலைவரிசையில் குறுக்கிட்ட எதிரியின் உயர் - அதிகாரி இப்படிச் சொன்னான் 'உன்ர தளபதி 5.2 ஐ (தளபதி ராகவனின் சங்கேதப் பெயர்) ஒட்டிசுட்டான்ல நாங்கள் போட்டிட்டம், எப்படி இனி என்ன செய்யப் போகிறாய்' 'அதுக்குத்தான் இப்ப உன்னட்ட வந்திருக்கிறம்' என்றார் தளபதி தீபன் 'எங்களையென்ன ஒட்டிசுட்டான் ஆமியெண்டு நினைச்சியே' என்றான் எதிரி 'நடக்கப்போறத பொறுத்திருந்துபார்' என்று நிதானமாகவும், சவாலாகவும் சொன்னார் தளபதி தீபன்.

மறுநாட்காலை தொடங்கிய சண்டையில் முன்னேறிய எமது படைத்தொகுதிகளின் கைகளில் பரந்தன் பிரதான படைத்தளம் விழுந்தது. இது எட்டாவது கஜபாகு றெஜிமென்டினுடையது. அடுத்திருந்த பிரதான படைத்தளமும் மூர்க்கத்துடன் முன்னேறிய புலிகளிடம் வீழ்ந்தது. இது ஆறாவது கெமுனுவோச் பற்றாலியனுடையது. நண்பகல் 11 மணிக்கு இவை முழுமையா வெற்றிகொள்ளப்பபட்டிருந்தன.

வெறுமைநகரில் வேட்டுச்சத்தங்களைத் தவிர வேறு ஒலிகளில்லை. ஒரு நகரத்தின் வாழ்வையே கொன்றொழித்து, கொல்லாமையைப் போதித்த புத்தனின் சிலையை போதிமரத்தடியில் இருத்தியிருந்தார்கள் அந்தக் கயவர்கள். பொறுக்கமுடியாத புத்தபெருமான் தன் கண்களை இறுகமூடி நிஸ்டையில் இருந்துவிட்டதைப் போலிருந்தது.

மற்றும் இன்றுதான் நீரேரியில் எமது விநியோக நடவடிக்கைகளையும், ஏனைய செயற்பாட்டையும் தொல்லைப்படுத்திவந்த MI- 24 உலங்குவானூர்தி சுட்டுவீழ்த்தப்பட்டது. அதன்பின் விமானப்படை முடமாகிப்போனது.

## 18-12-99

தளபதி கேணல் கருணா வழிநடத்திய சமர்முனையின் கட்டம் 111க்கான இலக்கு நிறைவடைய வத்திராயன்வரை அணிகள் நகரவேண்டியிருந்தது. ஆனால், பின்வாங்கியோடிய இராணுவத்தினரை இணைத்து உடுத்துறை பாடசாலைக் கட்டிடத்தொகுதிகளை வாய்ப்பாகப் பயன்படுத்தி எதிரி அதையொரு தளமாக மாற்றியிருந்தான். சென்ற நாட்களில் பலப்படுத்தப்பட்டிருந்த இத்தளத்தைத் தாக்குவதற்கான தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்ட அணிகள் இன்று சண்டையைத் தொடங்கின. முடிவில் இதை வெற்றிகொண்டு வத்திராயன் நோக்கி நகர்ந்த அணிகள் அங்குள்ள மினிமுகாமையும் தாக்கி அப்பிரதேசத்தையும் மீட்டுக்கொண்டன.

## 20-12-99 54-6 பிரிகேட் வீழ்ச்சி


கடந்த மூன்று நாட்கள் இப்படைத்தளத்தை சுற்றியிருந்த முன்னணிக் காவலரண்களைக் கைப்பற்றுவதற்காக வீதியின் வலம், இடமாக கடும் சண்டைகள் நடந்தன. வெற்றிகொள்ளப்பட்ட பற்றாலியன்களிலிருந்து தப்பியோடியவர்களும் இங்குதான் நிலைகொண்டிருந்தனர். புதிதாக சிறப்புப்படையினரும் வரவழைக்கப்பட்டிருந்தனர். இதை இழப்பதில்லையென்பதில் எதிரி உறுதியாக இருந்தான். நிறைந்த கட்டிடத் தொகுதிகளும், பாதுகாப்பான பதுங்குகுழிகளும் எதிரிக்கு நம்பிக்கையை கொடுத்தது. அதைவிட இராணுவத்தினரின் எண்ணிக்கைப் பலம் அவனுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. எனவே மூன்றுநாள் சண்டைகளிலும் ஒவ்வொரு காவலரணுக்காகவும் எதிரியும் நாங்களும் கடுமையாகச் சண்டையிட்டோம். சில சமயங்களில் ஒரே காவலரண் மாறிமாறி இருவரிடமும் வீழ்ந்தது. ஆனால் இன்று விடிந்திருந்தபோது ஒவ்வொருநாளும் மீற்றர்க்கணக்கில் முன்னேறிய நாங்கள் அத்தளத்தின் இருபக்கக் காவலரண்களையும் பிடித்துவிட்டிருந்தோம்.

ஆயினும், எதிரி உள்ச்சுற்றில் பாதுகாப்பாரண்களை ஏற்படுத்திக்கொண்டான். கட்டடத்தொகுதிகள் மேலும் வாய்ப்பாக இருந்தது அவனுக்கு. எனவே தளத்தின் மையத்தில் தாக்க புலி அணிகள் எதிரியரண்களைப் பிளந்து உள்நுழைந்தன. வீழ்ந்தது அப்படைத்தளம். மாடிக் கட்டிடத்தைக்கொண்ட இரசாயனத் தொழிற்சாலை தூண்களாக மட்டுமே உயர்ந்துநின்றது.


## 23-12-99 மீளக்கைப்பற்ற எதிரி முயற்சி

இன்று காலை 6.30 மணிக்கு இழந்துபோன வெற்றிலைக்கேணி கட்டைக்காட்டுப் பிரதேசங்களை மீளக்கைப்பற்றுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டனர் படையினர். இயக்கச்சிப் பகுதியில் அமைந்த வை. எம். சி. ஏ. வீதி வழியாக முன்னேறி எமது தற்காப்பரண்களைப் பிளந்து, மண்டலாயை அடைந்து அங்கிருந்து வெற்றிலைக்கேணியூடாக கட்டைக்காட்டையும் மீளக்கைப்பற்றுவது என்றிருந்தது இதன் திட்டம். காலை 6.30 மணிக்கு பெரும் தாக்குதல் பலத்தோடு நடவடிக்கைக்காக வரவழைக்கப்பட்ட கொமாண்டோப் படைப்பிரிவுடன் எமது காவலரண்களை ஊடறுத்து எதிரி முன்னேறினான். மாலதி, யாழ், இம்ரான் - பாண்டியன் படையணிகளும் உதவிக்கு ஜெயந்தன், புலனாய்வுத்துறை மகளிர் தாக்குதலணிகளும் எதிரியை முற்றுகையிட்டு

தமிழீழத்திலிருந்து
**பிரபுத்திரன்**



கேணல்
**பால்ராஜ்**



கேணல்
**பானு**



கேணல்
**சூசை**



கேணல்
**தீபன்**

தாக்குதலில் ஈடுபட்டன. முன்னேறவந்த படையினர் இப்போது தங்கள் வாழ்வின் முடிவுகளைச் சந்தித்துக்கொண்டிருந்தனர். இறுதியில் தமது திட்டத்தைக் கைவிட நேரிட்டதைப் போலவே சகாக்களின் உடல்களையும் கைவிட நேர்ந்தது. எம்மால் மட்டும் 50 வரையிலான உடல்கள் கைப்பற்றப்பட்டன. திட்டத்தின்படி எதிரியின் மீளக்கைப்பற்றல் நடவடிக்கையை அவனது புறப்படும் தளத்தினருகேயே முறியடிக்க வேண்டுமென்பதற்காக இயக்கச்சியில் முன்னேறித் தற்காப்பில் ஈடுபட்ட படைத் தொகுதி வெற்றிகரமாகச் செயற்பட்டு இதைச் சாதித்தது. கேணல் பால்ராஜின் கட்டளையின் கீழ் லெப். கேணல் பகீரதன் இத்தாக்குதலை வழிநடத்தினார்.

### 26-12-99 தரையிறக்க முயற்சி

தனங்கிளப்பு, கேரதீவு பகுதியை மீளக்கைப்பற்றுவதற்காக எமது தடுப்பரண்களை உடைத்து முன்னேற முடியாத எதிரி, அறுகுவெளியில் வான்வழித் தரையிறக்கம் ஒன்றின்மூலம் இதைச் சாதிக்க முயற்சித்தான். எமது தொடர்புகளைத் துண்டாடி தாக்கவந்த வான்கலங்கள் எமது தாக்குதலால் பின்வாங்கிக்கொண்டன. இத்தரையிறக்க முயற்சியும் முறியடிக்கப்பட்டது.

மற்றும், பரந்தன் நோக்கிய சமர்முனையில் புதிதாக சோதியா, இம்ரான்- பாண்டியன் படைத்தொகுதிகளை இணைத்து முன்னேறிய படைத்தொகுதிகள் புளியடி பிரதான தளத்தை கைப்பற்றிக்கொண்டன. தோல்விகண்ட எதிரிப்படை வரிசையில் விஜயபாகு றெஜிமென்டும் இப்போது இணைந்துகொண்டது.


### 27-12-99 54-6 பிரிகேட் வீழ்ச்சி

புளியடியை வெற்றிகொண்ட படைத்தொகுதிகள் உமையாள்புரத்திலிருந்த பிரிகேட் தலைமையகம் உள்ளிட்ட அப்படைத்தளத்தில் இன்று அதிகாலையில் சண்டையைத் தொடக்கின. 'உண்மை வெற்றி' க்கு முன்னேறிய படைவரிசையில் புலிகளால் வெற்றிகொள்ளப்படப்போகும் மூன்றாவது பிரிகேட் இதுவாகும். கிளிநொச்சியில் 54-6, பரந்தனில் 64-6 இப்போது உமையாள்புரத்தில் 54-5

இங்கிருந்து எதிரி பின்வாங்கினால் வெட்டையும், நீர்நிலையுமான நிலப்பரப்பைக் கடந்து உப்பளத்திற்குச் செல்லவேண்டும். அப்படி நடந்துவிட்டால் உப்பளத்திலிருந்து இனிமேல் அந்த வெட்டைப் பிரதேசத்தைக் கடந்து முன்னேறுவது சாத்தியமற்றுப்போய்விடும். ஏனெனில் கிட்டு பீரங்கிப்படையணியுட்பட விடுதலைப் புலிகளின் படைத்துறை வளர்ச்சியால் இந்த வெளிப்பிரதேசத்தை கடப்பது இனி இலகுவாக இருக்காது. எனவே, உமையாள்புரம் அவனுக்கு முக்கியத்துவம் மிக்கது. ஆயினும், மும்முனைகளில் இன்று நடந்த சண்டையில் எதிரிக்கு அதைத் தக்கவைப்பதற்கான வாய்ப்பு இல்லாமல் போயிற்று. அந்த அழகிய உமையாள்புர கிராமம் தன்னை அலங்கோலப்படுத்தியவர்களிடமிருந்து மீண்டு கொண்டது.

### 30-12-99 மீண்டும் முன்னேறும் முயற்சி

கேரதீவு - சங்குப்பிட்டிச் சமர்முனையில் வான்வழித் தரையிறக்கம் தோல்விகண்ட நிலையில், தரையாலும் நீரேரியாலும் முன்னேறும் நடவடிக்கையில் எதிரி முயன்றான். சாவகச்சேரியிலிருந்து சில கிலோமீற்றர்களில் நாம் நிலைகொண்டிருப்பதும், தரைவழியாக ஒருதளத்தை குடாநாட்டில் பேணுவதும் யாழ் இராணுவத்திற்கு எப்பொழுதும் அச்சுறுத்தலாக இருக்குமென எதிரி எண்ணினான். எனவே, தனங்கிளப்பிற்கு ஏற்கனவே வரவழைக்கப்பட்டிருந்த சிறப்புப் படையினரைக் கொண்டு எமது தற்காப்பை உடைத்து முன்னேறும் அதேவேளை, கிளாலி நீரேரியூடாக விசேட படகுப்பிரிவைக்கொண்டு பின்புறமாகவும் எம்மைத்தாக்குவதோடு, சங்குப்பிட்டியுடனான எமது தொடர்பைத் துண்டித்து, அத்தளத்தில் எம்மை முற்றுகைக்குட்படுத்தி தாக்கியழிப்பதற்காக இருமுனைகளில் எதிரி சண்டையைத் தொடக்கினான்.



விசேட படகுப்படைப்பிரிவை, லெப். கேணல் பகலவனின் தலைமையில் எதிர்கொண்ட கடற்புலிகள் கடும்சண்டையில் எதிரியின் முயற்சியை முறியடித்தனர். முன்னேறி வந்த 'வோட்டஜெற்' றை கரும்புலித்தாக்குதல் மூலம் கரும்புலி கப்டன் அறிவரசன் மூழ்கடித்தான். தொடர் சண்டையில் எதிரியின் மூன்று 'புளூஸ்ரார்' படகுகள் சேதமடைந்தன. நீரேரியில் விசேட படகுப்பிரிவுக்கு இப்படியான கதியேற்பட, தரையில் முன்னேறிய எதிரியை முற்றுகையிட்டுத் தாக்கினர் புலிகள். முற்றுகையிட வந்த படையினர் இப்பொழுது தம் சகாக்களின் உடல்களையும்விட்டு 50க்கும் மேற்பட்ட படையினரைப் பலிகொடுத்து பின்வாங்கியோடினர்.

### 01-01-2000 இந்த புத்தாயிரமாம் ஆண்டின் முதற்சண்டை

இந்த ஆயிரமாம் ஆண்டில் உலகில் அமைதி வேண்டுமென்று எவர்தான் கூறினாலும், இனவாதிகளின் காதுகள் அதை கிரகித்துக்கொள்ளப் போவதில்லை. இந்த ஆயிரத்தின் முதற்சண்டை இங்குதான் நடந்திருக்கவேண்டும். நள்ளிரவு தாண்டிய வேளை இயக்கச்சி புளியடிச் சந்தியிலிருந்து முன்னேறிய எதிரி எமது தற்காப்பை ஊடறுத்து முகாவில் வீதியைக் கைப்பற்றி கண்டிவீதிக்கான அச்சுறுத்தலை தவிர்த்துவிட விரும்பினான். இதுவே இந்நடவடிக்கையின் உடனடி இலக்காக இருந்தது. கண்டிவீதியை அண்மித்து நாம் நிலையெடுத்திருந்ததால் எதிரிக்கு இந்நடவடிக்கை அவசியமாயிருந்தது.


'ஜயசிக்குறு' வில் இறுதிவரை முன்னேறிய 53வது டிவிசனை வரவழைத்து சிறப்புப்படைப்பிரிவினையும் உள்ளடக்கி நடவடிக்கையில் ஈடுபடுத்தினான் எதிரி. இதன் டிவிசன் கொமாண்டர் மேஜர் ஜெனரல் கெட்டியாராச்சி நடவடிக்கையைப் பொறுப்பெடுத்து நேரடியாக வழிநடத்தினான். முன்னேறிய எதிரிகளோடு காலை 6.30ற்கு பெரும் சண்டை மூண்டது. எமது நிலைகளைப் பிளந்து முருகந்தநகர் வரை முன்னேறினான் எதிரி. முறியடிப்புத் தாக்குதலில் இறங்கின புலியணிகள். மேஜர் சாந்தகுமாரியின் தலைமையிலான மாலதி படையணியும், யாழ் படையணியும், புலனாய்வுத்துறை மகளிர் தாக்குதல் படையணியும் இத்தாக்குதலுக்கு களமிறங்கின. ஒரு கடுமையான சண்டையில் வீரத்தோடு போராடிய புலிகள் தொக்கைணக்கான எதிரிகளை வீழ்த்தினர். மொத்த அழிவிலிருந்து தம்மைப் பாதுகாக்க 53வது டிவிசன் பின்வாங்கியோடியது.

### விடுதலையின் வெற்றியாண்டு

'ஓயாத அலைகள் - 3 ' என எமது தலைவர் வழிநடத்தும் இச்சமர், ஒடுக்கப்பட்ட தமிழ்மக்களின் வாழ்வில் ஒளியைப் பிறப்பித்து, கட்டம் 111இல் தன் இலக்குகளை வெற்றிகொண்டது. புதிய ஆயிரமாம் ஆண்டின் அமைதியைக் கிழித்து முதற்சண்டையைத் தொடக்கிய ஆக்கிரமிப்புத் திமிர்கொண்ட இனவெறியாளர்கள் தங்கள் சகாக்களது உடல்களையே களத்தில் விட்டு ஓடி இந்த புத்தாயிரமாண்டின் முதல் அவமானத்தைத் தமதாக்கிக் கொண்டனர்.

ஆக்கிரமிப்பாளர்களை வெற்றிகொண்ட இந்த முதற்சண்டையில் புலிகளின் பெண்கள் அணியினரே அதிக பங்கேற்றனர் என்பது குறித்துச் சொல்லப்பட வேண்டியது.

'உண்மையும், தர்மமுமே எமது பலம்' எனக்கொண்ட தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், ஒடுக்குமுறைக்கெதிராக எழுந்த தமிழ்மக்களின் வெற்றியாக புத்தாயிரமாண்டின் முதல்வெற்றியை ஆக்கியதன் மூலம், இந்த ஆயிரமாம் ஆண்டை, ஆக்கிரமிப்புக்கள் அழிந்த விடுதலையின் வெற்றியாண்டாகத் தொடக்கிவைத்தார். ■



கேணல் **கருணா**



லெப். கேணல் **விதுஷா**




லெப். கேணல் **ராபட்**



லெப். கேணல் **அன்ரன்**

# கணப்பொழுது



லெப்டினன்ட் கேர்ணல் நவம் (அருமைராஜ்)

சிங்கள இனவெறித் தாக்குதலினால் மலையகத்திலிருந்து இடம் பெயர்ந்து முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாயில் தன் தாய் தந்தை குடும்பத்தாரோடு வாழ்ந்துவந்த நவம் 1983இல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டான்.

மலையகத்தில் மிக வறுமையான குடும்பத்தில் பிறந்த நவம் தன் பள்ளிப் படிப்பைக்கூட முடிக்கும் வசதியை இழந்தவன். கல்விக்கூடப் பாடங்களை அதிகம் படிக்காவிட்டாலும், பொது நலன், இன உணர்வு, சுதந்திரம், அஞ்சாமை, துணிவு என்பவற்றைத் தன் தந்தையின் நடைமுறை வாழ்க்கை அனுபவத்திலிருந்து பெற்ற நவம் தான் பிறந்த இடத்திலிருந்து இடம்பெயர்ந்து அகதியாகத் தமிழீழப் பகுதிக்கு வந்த அவலத்தையும் நன்கு அனுபவித்து உணர்ந்தவன்.

அதனால் தமிழீழத் தனியரசைப் பெற்றாலன்றித் தமிழ் மக்களின் இது போன்ற இன்னல்களை எது விதத்திலும் தடுத்து நிறுத்த முடியாதென்ற முடிவுக்கு நவம் ஆளானான். எனவே தமிழீழ விடுதலைக்காக உண்மையாகவும், உறுதியாகவும் போராடி நெருக்கடிகளுக்கு மத்தியில் பல தியாகங்களைச் செய்து வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தான்.

தாய் தந்தையரால் அருமைராஜ் என்று பெயரிடப்பட்ட நவம் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்ததும் நவம் என்ற இயக்கப் பெயரை வரித்துக் கொண்டான்.

இயக்கம் மேற்கொள்ளவிருந்த சிங்கள இராணுவத்தின் மீதான தாக்குதல் நடவடிக்கை ஒன்றுக்கான பயிற்சியின் போது ஏற்பட்ட விபத்தில் மணிக்கட்டுக்கு மேல் வலதுகையை இழந்த நவம், அதனால் சோர்ந்துவிடவில்லை, துவண்டு விடவில்லை. மிகுந்த தன்னம்பிக்கையுடன் விரைவிலேயே தன் இடது கையினால் ஆயுதங்களைக் கையாளப் பழகிக் கொண்டான். இடதுகையினாலேயே சகல வாகனங்களையும் வேகமாகவும், சாதுர்யமாகவும் செலுத்தும் வகையில் பயிற்சி பெற்றான்.

இயக்கத்தில் மிகவும் துடிப்பாகச் செயலாற்றி வந்த நவத்தின் காலடிபடாத இடமே வன்னிக்காடுகளில் இல்லை என்று கூறிவிடலாம். அந்த அடர்ந்த காடுகளில் திசையறிகருவி (கொம்பாஸ்) இன்றி எங்கிருந்தும், குறிப்பிட்ட எந்தப் பகுதிக்கும் விரைவாகச் செல்லக்கூடிய திறமையை அவனது காட்டு வாழ்க்கை அவனுக்குப் பெற்றுக் கொடுத்திருந்தது. தான் படும் அல்லல்களும் வாழ்ந்த அடிமை வாழ்வும் எதிர்காலச்சந்ததி படக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தான்.

நவம் இந்தத் திறமையை தன்னுள் மறைத்து வைத்திருக்கவில்லை. இயக்கத்தில் உள்ள பல இளைஞர்களுக்கு அடர்ந்த காட்டில் நடமாடுதல், போன இடத்துக்கே திரும்பி வருதல், திசைகளை அறிதல் போன்றவற்றில் பயிற்சி அளித்தான். அவனிடம் பயிற்சி பெற்ற இயக்க இளைஞர்கள் பலர் இன்று காட்களிலெல்லாம். உற்சாகத்துடன் கலந்து கொண்டான். களத்தில் புயல் வேகத்தில் செயற்படும் திறமையினால் பல தாக்குதல் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பு அவனைத் தேடி வந்தது. இந்திய- இலங்கை ஒப்பந்தத்துக்கு முன் முல்லைத்தீவு மாவட்டம் முந்திரிகைக் குளத்தில் விடுதலைப் புலிகள் சிங்களப் படைகள் மீது நடத்திய பெரும் தாக்குதலுக்கான சகல முன் ஏற்பாடுகளையும் செய்தவன் நவம். அத்தாக்குதலின்போது சிங்கள இராணுவத்தினரிடமிருந்து 12 ஏ. கேரைபிள்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

ஒற்றைக் கையுடன் அவன் தலைமை தாங்கி நடத்திய பல தாக்குதல்களின் மூலம் இந்தியப் படையினரிடமிருந்தும், சிங்களப் படைகளிடமிருந்தும் ஏராளமான ஆயுதங்களையும், ரவைகளையும், வெடி மருந்துகளையும் இயக்கத்துக்குக் கொண்டுவந்து குவித்துள்ளான்.

இயக்கம் நடத்திய தாக்குதல்களின் போது தனது திறமையையும், துணிச்சலையும் வெளிப்படுத்திய நவம் தலைவர் பிரபாகரனின் பெருமதிப்பைப் பெற்றான். இயக்கத்தில் பல பொறுப்புகள் அவனைத் தேடிவந்தன. விரைவிலேயே இயக்கத்தின் லெப்டினன்ட் கேர்ணல் பதவியைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் இயக்கப் பொறுப்பாளனாகவும் ஆனான்.

மலையகத் தமிழர்களை அரவணைத்துச் செல்லவேண்டும், ஐக்கியப்பட வேண்டும், என்று அடுக்கு மொழிகளில் வார்த்தை ஜாலம் பேசிக் கொள்ளும் பல குழுக்கள் நடைமுறையில் மலையகத் தமிழர்களை அடிமைகள் போலத்தான் தமது இயக்கத்தில் பயன்படுத்திக் கொண்டிருந்தனர். விடுதலைப் புலிகள் செயலிலேயே தமது எண்ணங்களை வெளிப்படுத்துபவர்கள். செயற்திறனுக்கும், மதியூகத்துக்கும், தியாக சிந்தைக்கும் மதிப்புக் கொடுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில், கல்வியறிவு அதிகமதில்லாதபோதிலும், அஞ்சாமை, ஆற்றல், அடக்கம் என்பவற்றை வெளிப்படுத்திய மலையகத் தமிழனான நவம் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பெரிய பதவியான மாவட்டப் பொறுப்பாளர் பதவியையும், லெப்டினன்ட் கேர்ணல் பதவியையும் பெற்றான்.

டுப் பயணத்தில் மிகுந்த ஆற்றலுள்ளவர்களாகத் திகழ்கிறார்கள். ஒரு கையை இழந்துவிட்ட போதும் களத்திலிறங்க அவன் பின் நின்றதில்லை. விடுதலைப் புலிகள் நடத்திய பெரும் தாக்குதல்

வடக்குக் கிழக்கு மாகாணத்தை இணைக்கும் மணலாற்றுப் பகுதியில் (வெலி ஓயாவில்) சிங்களக் குடியேற்றத்துக்கு உதவியாகவும், பாதுகாப்பாகவும் செயற்பட்டு வந்த சிங்கள இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலிலும் லெப்டினன்ட் கேர்ணல் நவம் முக்கிய பங்கேற்றான். இத்தாக்குதலில் 21 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு அவர்களிடமிருந்து ஏராளமான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

04.05.1989 அன்று, குளவிசுட்டான் காட்டிலிருந்து சிறீலங்கா விமானப் படையின் கெலிகாப்டரில் கொழும்புக்கு பேச்சுவார்த்தைக்குச் சென்ற யோகி, மூர்த்தி மற்றும் தோழர்களை வழியனுப்பிவிட்டுத் திரும்பிய லெப்டினன்ட் கேர்ணல் நவம் மறுவாரமே பெரிய தாக்குதலொன்றுக்குத் தயாரானான். 13.05.1989 அன்று இயக்கத்தின் தாக்குதலொன்றுக்கு தலைமையேற்றுச் சென்ற நவம், நெடுங்கேணி பாடசாலையொன்றில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையினரின் ஐந்து காவல் அரண்களை ஒரே நேரத்தில் தாக்கி அங்கிருந்தஏராளமான ஆயுதங்களைக் கைப்பற்றினான். அந்த அதிரடித் தாக்குதலில் 18 இந்தியப் படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். அக்காலத்தில் விடுதலைப் புலிகள் இந்தியப் படையின்மீது மேற்கொண்ட மிகப் பெரிய தாக்குதல் நடவடிக்கை இதுவாகும். இத்தாக்குதலின் போது தலைமையேற்றுச் சென்ற லெப்டினன்ட் கேர்ணல் நவம் காயமடைந்த போதிலும் தாக்குதலுக்கு அழைத்துச் சென்ற இயக்க வீரர்களையும் தாக்குதலின்போது கைப்பற்றிய ஆயுதங்களையும் பாதுகாப்பாக இருப்பிடத்துக்குக் கொண்டு வந்து சேர்த்துவிட்டு தன் வயிற்றில் துப்பாக்கிக் குண்டு பட்ட காயத்துக்கு சிகிச்சை பெற்றான். ஆயினும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவன் வீர மரணத்தைத் தழுவிக் கொண்டான். ■

## உன் சுவாசம் நின்றதா...?

மின்னலாய் ஒரு கணம்
தீப்பொறியாய்
காதுகளைச்
செவிடாக்கிய
செய்தி கேட்ட
செய்தியில்
நொருப்பாய் என்
நெஞ்சின்
வேதனையின்
வெளிப்பாடாய்
வழிந்த கண்ணீரில்
மூழ்கிப் போனேன்
உனது முத்துக்
கையெழுத்தைத்
தேடிப்பார்க்கிறேன்-அது
தொலைந்து போய்
என் கண்கள்
விட்டுக்கரைந்து போய்......
எழுது...எழுது
இவ் அடிமைச்சிறைவிட்டு
வெளியே வர என்றவனே
இந்த எழுத்துக்கள் தான்
இன்றெமக்கு தேவையென்று
கிறுக்கல்கள்
எனநான் கிறுக்கி
வைத்திருந்தவைகளைக்
கவிதையென்று
கண்டு கொண்டவனே..
குரல் வளையை
யாரோ எறிமித்ததுபோல்
விக்கித்து
விம்முகிறேன்

இத்தனை வேகமாய்
ஏனடா..?
புற்களைக் கூட
மிதிக்கப் பயப்படும்
உன் பாதங்கள்
தீக்குள் நடந்தவலாம்
நாங்கள் கருகையில்
அவர்கள் வாழவோ..?
அடிக்கடி கூறுநீ
அனல் கக்கும்
விழிப்பூவில்
அக்கினி வளர்த்தவனே..
உன் சுவாசம்
நின்றதா...?
பாடித்திரிந்த பறவை
இனிப்பாடாதா...?
பாராட்டுக் கையெழுத்திட்டு- என்னை
அக்கினிப்பூக்களை
ஆக்கச் செய்தவனே
இவ்வுலகில்
இன்று நீ இல்லையாம்...
பாதியுயிர்
பறந்து விட்டாற்போல்..
பதைக்கிறது நெஞ்சு
நம்ப மனம் மறுக்கும்
செய்தி நண்பனே..
பொய்யிருக்காதா..?
புதிதாய்
மொட்டவிழும்
உன் மலர்ச்சிரிப்பினை
இங்கினி
எங்கே தேட...

புதியநிலா - ஜேர்மனி

# அட இவ்வளவுதானா

'பெயர்...'

'பொன்னுப்பிள்ளை'

'மிஸ்டரின்ரை பெயர்....'

'.................'

'உங்கட அவரின்ரை பெயர்'

'அவர் இல்லை. இல்லாத ஆளை இப்ப என்னத்திற்கு' என்ற பொன்னுப்பிள்ளை சனங்களைப் பார்க்கத் தொட-ங்கினாள். அவரின்ரை முகத்தினைத் தேடினாளா?

அதிகாரியின் முகத்தில் அத்துமீறாத அதிகாரம் வெளிப்பட்டது. 'எங்கை அவர்' சுத்தமான தமிழ் உச்சரிப்பு காரம் சேர்ந்திருந்தது. 'அவர் செத்துப் போனார்' எந்தவிதமான ஈரமும் இல்லாமல் பட்டென்று பதில் சொன்னாள் பொன்னுப்பிள்ளை. 'அவரின்ரை பேரைச் சொன்னால் காணும்'

'தம்பையா'

'விலாசம் '

'ஆரின்ரை'

'உங்கடைதான்'

'பூவோடை சுடலையடி எச்சாட்டி...' சொல்லிக் கொண்டே போனாள்.

அதிகாரி தலைவிறைத்து பொன்னுப்பிள்ளையைப் பார்த்தான்.

'வயது'

'அறுபத்தியொன்று'

'அடையாள அட்டை இலக்கம் '

'எந்த அடையாள அட்டை'

'தேசிய அடையாள அட்டை'

பொன்னுப்பிள்ளை கையில் இருந்த அட்டைகளை மேசையில் பரப்பினாள். சந்தைக் கடையாக அது விரிந்தது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரகம், சிரித்து, நெளித்து, கண்சிமிட்டி, பல்லைக்காட்டி

அதில் ஒன்றை இழுத்தெடுத்த அதிகாரி அதைப் பார்த்து பதிய ஆரம்பித்தான்.

'383546300 ஏ இலங்கைத் தமிழ்

பதிவு முடிய எல்லா அடையாள அட்டைகளையும் விநோ-தமான ரசனையுடன் பார்த்த அதிகாரி, 'காணாமல் போனது ஆர் ' என்ற கேள்வியைத் தொடுத்தான்.

◊ ◊ ◊

அந்த மண்டபம் முழுக்க ஆக்கள் அழுத கண்களும், சிந்திய மூக்குகளுமாக ஆண்களும், பெண்களும் புலம்பிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களின் புலம்பல்கள் அடுக்கடுக்காக வட்டம் போட்டு, மேற்கிளம்பின. பிறகு ஒன்றின் மீது ஒன்றாகப் படியத் தொடங்கி இருக்க வேண்டும்.

அந்த அகன்ற மண்டபத்தின் கூரைகளைத் தாண்டி அங்கால போகாமல் உள்ளுக்குள்ளேயே தம் சோகங்களை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன.

ஆட்களின் நெருக்கமும் அவர்களின் அவலங்களும் சேர்ந்து மண்டப வெளியின் காற்றினை மூச்சடைக்கப் பண்ணின. உஷ்ண சுவாசமும் வேதனையில் முக்குளித்த துயரங்களும் தத்தளித்தன.

ஆட்கள் வரிசையாக நிற்பதுபோலவும், வரிசை இல்லாமல் நிற்பது போலவும் பாத்திரத்தினுள் ஓடும்பாதர-சமாக நின்றிருந்தனர்.

பளீர் என்ற விசாலமான மேசைகளின் முன் அதிகாரிகள் தண்டனைக் கைதிகள் போல கதிரைகளில் அழுத்த உட்கார்த்திருந்தனர். அவர்கள் முன்னாள் இருந்த கதிரைகளில் அந்தக் கதிரைகளுக்குப் பொருத்தமில்லாத ஆட்கள்.

அதிகாரிகளில் சிலர் வாணிஸ் பூசினாற்போல மினுமினுப்பாக இருந்தார்கள். எண்ணெய் பிசுபிசுப்பு இல்லாமல் மட்டமாய் வெட்டப்பட்ட தலைமயிர், ஒருவர் மாத்திரம் கொஞ்சம் சுருட்டை, பால்நுரையில் வார்க்கப்பட்டது போல இரண்டு பேர் வெள்ளை முழுக்கை சேட்டுகள், வேறு இரண்டு பேர் அடக்கி ஒடுக்கப்பட்ட நீல, மஞ்சள் நிறச் சேட்டுக்கள் பாம்புத் தோல் போல வழுவழுத்த ரைகள்

அதிகாரிகளின் உடைகளில் இருந்த 'சிவில்' தனம் பார்வையிலும் தோற்றத்திலும் இல்லை. புறம்போக்காக இருந்த ஒருவரின் முகம் குளத்தில் முக்கி எழுந்தவர்போல சோர்ந்துபோய் இருந்தது.

மூப்பை ஓரங்கட்ட படுபிரயத்தனம் எடுத்து ஆனால் ஆட்களின் அமளிபோல அது கட்டுப்படாது இருந்தது.

சற்றே நரையோடி தலைமுடி கழுத்து வரை வளைந்திருந்தது. தாடையில் சதை மடிப்பு, முகத்தினை உப்பலாக்கியது. பவுண்நிற பிறேம் போட்ட கண்ணாடியை எடுத்து முகத்தைத் துடைத்தபோது அவரின் சலிப்பு தலை நீட்டியது.

எல்லா அதிகாரிகளும் களைத்திருந்தார்கள். கதைத்துக் கதைத்துக் களைத்ததா? என்பது புரியவில்லை. ஆட்களின் அமளியைவிட அவர்களின் அவலங்களின் அடுக்குகளின் பாரங்களால் அதிகாரிகள் மூச்சுத் திணறினார்கள்.

அந்த அந்தரிப்பினைப் போக்க அவர்கள்விட்ட சிகரெட் புகைகூட போக வழியில்லாது மேசைகளின் முன்னாலேயே உயிர்ப்பிழந்து துடித்தது.

வெள்ளை வேட்டி நாசனால் தோளில் தொங்கிய சால்வை சகிதம் தன் முகக் கொள்ளளவைவிட அதிகமாகச் சிரித்து வந்த பிரமுகர் ஒருவர் முகம் துடைத்துக் கொண்டிருந்த அதிகாரி முன்னால் வந்து நின்றார்.

அதிகாரி சற்றே தலை நிமிர்த்த அவனின் பார்வையின் கூரிய முனை பிரமுகரின் நெற்றிப்பொட்டில் தைத்தது.

'நான் கனகசபை.......... சங்கத்தின் செயலாளர்', 'ஓ..ஐ..சி. நீங்களா இருங்கோ'

அதிகாரியின் கூரியபார்வையில் சுவிட்ச்போட்டது போல ஏசியாகியாயிற்று முதல் இருந்த வெம்மை மேசையில் இருந்த 'அவுட்' றேக்குள் ஒளிந்தது.

'சொல்லுங்கோ, என்ன விசயம்'

'நான் ஒரு அலுவல் அல்ல நாலைஞ்சு அலுவலாக வந்தனான்'

அதிகாரியின் முகம் ஒரு நொடிப் பொழுதில் அதிர்வு கண்டு மீண்டது என்றாலும் அதனை வெளிக்காட்டவில்லை.

'சொல்லுங்கோ'

'நீங்கள் நல்லாய் களைச்சுப் போனீங்கள் போல' என்று கேட்ட கனகசபையின் பார்வை குழையடிக்க ஆரம்பித்தது. 'சரியான கிறவுட், சனங்களுக்கு உதவி செய்யத்தானே நாங்கள் வந்திருக்கிறம், ஆனால் அதை சனம் ஏற்றுக் கொள்ளுறதாய் இல்லை. பெரிய கரைச்சல்' சுழித்த முகத்தின் இரு பக்கங்கள் ஊடாகவும் வெறுப்பு வடிந்தது. அது உண்மைதான் சனம் எல்லாத்துக்கும் அவசரம்தான்.

பருத்து சிவந்த முகத்தில் வியர்வைத் துளிகள் மணல்ப்பரப்பில் துருத்திக் கொண்டு நிற்கும் மேடுகள் போல கையில் இருந்த தடித்த கோவைகளை மேசைமேல் பரத்தினார் கனகசபை. குழியில் அடக்க மறுத்த சடலத்தின் கை கால்கள்போல கோவைகள் ஊடாக தாள்கள் மிதத்திக் கொண்டிருத்தன. 'நீங்களும் யாராவது காணாமல் போன ஆட்கள் தொடர்பாக டிஸ்கஸ் பண்ண வந்தனீங்களோ' முகத்தில் கண்ணாடியை பொருத்தி எதையோ பார்வையிட வெளிப்பட்டவர் போல அதிகாரி காணப்பட்டான்.

'இல்லையில்லை, அப்பிடி ஒரு பிரச்சினை இல்லை. அதுகளை அந்தந்த ஆட்களே பார்க்கிறது நல்லது என்று விட்டிட்டம். அதுக்கெல்லாம் தனித்தனி அமைப்புக்கள் இருக்குத்தானே 'ஓ.ஐ.சி' தோள்களை உதறிய அதிகாரி சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டான். தாங்கள் கதைப்பதையே சனங்கள் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கவும் கண்டான்.

பொன்னுப்பிள்ளையும் ஓரமாகவே நின்று கொண்டிருந்தாள்: அவள் மனக் கூண்டுக்குள் அந்த நினைப்பு மாத்திரம் சிறகடித்துக் கொண்டிருந்தது. அது அவனின் உயிரோடு ஓடிக் கொண்டு இருந்தது. அவளின் இரத்தத்தின் இரத்தமாய் வளர்ந்து உருவெடுத்தது. நெஞ்சு நிமித்தியதின் நினைப்பு.

ஆயிரத்துத் தொளாயிரத்தி தொன்னூற்றி ஆறில் காணாமற்போய் வெறுமனே அந்த நினைப்பும் தவிப்பும் தான் நெஞ்சத்தினுள் குடிகொண்டுவிட்டது.

அவளுக்கு மாத்திரம் அல்ல அவளைப்போல எத்தனையோ பேர் பாரக் கூண்டுகளை நெஞ்சில் சுமந்தபடி தம் உணர்வுகளை மனசுக்குள்ளேயே வைத்து புடம்போட்டுக் கொண்டு,

கனகசபை சுற்றிச் சுற்றிப் பார்த்தார். சுற்றிலும் ஆக்கள்தான். பழுத்துப்போன முகங்கள். புதிது புதிதாக விரிந்து கொண்டு போகும் எதிர்பார்ப்புக்களும் விழியோர-ங்களின் ஈரப்பசைத் தவிப்புக்களுடன்,

'என்ன மிஸ்டர் கனகசபை'

அதிகாரி சோர்வினைத்தவிர்த்துக் கொண்டு கனகசபையை வார்த்தைகளால் தீண்டினான்.

'இல்லை....' மென்று விழுங்கினார் கனகசபை.

'என்ன....'

'நான் கதைக்க வந்தது தனிப்பட்ட பிரச்சினைகள் இல்லை'

'அப்ப...'

'பொதுப்பிரச்சினை ஆட்கள் எல்லோருக்குமானது'

'ஓ போக்குவரத்துப் பிரச்சினையா? அது சரியான பிரச்சினைதான். நாங்களும் வலுவாய்த் தெண்டிக்கிறம். எப்பிடியும் கப்பல் போக்குவரத்து செய்து போடலாம் கிழமைக்கு இரண்டு தடவையாவது... ' என்று நீண்ட அதிகாரியின் உரையினை கனகசபை வெட்டி இடைமறித்தார்.

'அது தெரியும் தானே. நான் கதைக்க வந்தது அதுவல்ல' கண்களைக் குறுக்கிக் கொண்ட அதிகாரி.

'அப்ப'

கனகசபை சுற்றிலும் பார்வையால் ஒருவட்டம் போட்டார்.

'மீளக்குடியேற்றப் பிரச்சினைதானே, அதுக்கு இப்ப ஒண்டும் செய்யேலாது என்றுதான் எங்களுக்கு மேல் இருக்கிற ஆட்கள் சொல்லுகினம். ஏனென்டால் அதெல்லாம் பாதுகாப்போடை சம்பந்தப்பட்டது கிட்டத்தட்ட நாற்பது ஜீ எஸ் டிவிசனில் உங்கட பக்கத்தில் மாத்திரம் ஆக்களை குடியேற்றாமல் இருக்குது'

கனகசபை மீண்டும் குறுக்கே ஓடினார்.

'உதெல்லாம் தீர்க்கமுடியாத பிரச்சினை எண்டு தெரியும்தானே'

அதிகாரி முகத்தில் மெல்லென சிரிப்பு கிளம்பியது. அத்துடன் இந்த மனிசன் என்ன கேட்கப்போகின்றார் என்ற முன்னூகிக்க முடியாத ஒரு அந்தரமும் ஏற்பட்டது.

'ஆஸ்பத்திரிகளில் மருந்துப் பிரச்சினைகளா? மருந்துகளை தாராளமாய் அனுப்ப நாங்களும் எங்கட உயர் அதிகாரிகள் எல்லாரும் முயற்சி எடுக்கிறம்தான், எண்டாலும் பாதுகாப்பு அனுமதி அது இது எண்டு இழுபட்டு சரியான



சிதம்பர திருச்செந்திநாதன்

தொடர்ச்சி 15ம் பக்கம்

## அன்புச் சகோதரமே...
## வணக்கம்!

பார்த்தாயா சகோதரமே.. ஆனையிறவு பட்டபாட்டை.

அதைவிட ஆனையிறவால்.. சிங்களமும் சிங்களத்தின் நண்பர்களும் சிங்களத்தின் நண்பர்களால் ஏற்படப்போகும் தொல்லையை எண்ணி.. நண்பர்களின் எதிரிகளும் பட்டபாட்டைப் பார்த்திருப்பாய்.

ஆலம்விருட்சம் ஒன்று, ஒரு சிறு விதைக்குள் முடங்கிக் கிடப்பது போன்று இத்தனை பெரும் சச்சரவுகளும் சமாச்சாரங்களும் பொதிந்து கிடந்திருக்கின்றது ஆனையிறவில்.

இன்று ஆனையிறவு வெற்றி கொள்ளப்பட்டிருக்கின்றது. முன்பு சாத்தியப்படாத ஒரு வரலாற்றுக் காரியத்தை, சந்திரிகா அரசின் புண்ணியத்தில் விடுதலைப் புலிகள் சாத்தியமாக்கியிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளை வன்னிக்கு விரட்டி, பலவீனப்படுத்தி சிறிது சிறிதாக அழித்தொழித்து தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை முற்றாக நசுக்கிவிடலாம் என்று, 1995ம் ஆண்டு, சந்திரிகா கனவு கண்டிருக்கக்கூடும். அதனால் அது 'சூரியக்கதிர்களையும்', 'ஜெயசிக்குறுய்க்களையும்' இன்னும் இன்னும் புதுப்புதுப் பெயர்கள் சூட்டி, இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு, தமிழர் நிலங்களை அபகரித்து, விடுதலைப் புலிகளின் சுயாதீன நடமாட்ட எல்லைகளைச் சுருக்கியது.

யாழ்ப்பாணத்தில் ரத்வத்தை கொடியேத்தியபோதும்.. ரத்வத்தையிடம் இருந்து சந்திரிகா யாழ் வெற்றிப் பட்டோலையை வைபவரீதியாகப் பெற்றுக்கொண்டபோதும், யாவும் முடிந்தாகிவிட்டதென்று சிங்களம் இன்பக்கனவுகள் கண்டிருக்கக்கூடும். சிங்களத்து நாயகன் ரத்வத்தையும், இனவாதத்தை தற்போதைக்கு தலைமையேற்றுள்ள சந்திரிகாவும் தமிழரின் விடுதலைக்கு வேட்டுவைத்துவிட்டார்கள் என்று சிங்களம் வெளியரங்களாகவே களிகொண்டு கூத்தாடியது. 'கொண்டாடுங்கள்... ஆனால் அமைதியாகக் கொண்டாடுங்கள்' என்று சந்திரிகாவின் அன்பான வேண்டுகோள் வேறு. அன்று தமிழினம் எவ்வளவு நொந்துபோயிருந்தது?

வெறும் எல்லைகளை மட்டும்தான் சிங்களத்தால் சுருக்க முடிந்தது. ஆனால், விடுதலையின் ஆவல்... அவா தன் எல்லைகளை விரித்துச் சிறகடித்தது. அதன் ஆவேசக்குரல் சிங்களத்தின் தலைநகர்வரை எதிரொலித்தது.

விடுதலைப் புலிகள், நவீன ஆயுதங்கள் தரித்த மரபுப் போர்படையானதும், பெருந்தொகையான நவீன ஆயுதங்களைப் பெற்றதும் சந்திரிகா ஆட்சிக்காலத்தில்தான். சிங்களத்தின் இராணுவ நடவடிக்கைகளே விடுதலைப் புலிகளின் சிறப்பான பயிற்சிக்களமாயின. வெளிநாட்டுப் பயிற்சி பெற்ற சிங்களப்படையினருடன் மோதுவதென்பது, எத்துணை அனுபவம் வாய்ந்தது.

ஒரு வேளை, இந்தப் பத்திரிகை வெளிவந்து உங்கள் கைகளை வந்தடைவதற்கிடையில், யாழ்ப்பாணமும்.. யாழ் குடாநாடு முழுவதுமே விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்டு விடும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அத்தனை வேகம். சிங்களத்திற்கோ மாதங்கள் வருடங்கள் தேவைப்பட்டது. ஆனால் விடுதலைப் புலிகளுக்கோ.. நாட்கள் மணித்தியாலங்கள் போதுமானவை. இந்த வேகத்திற்கும் வளர்ச்சிக்கும் சந்திரிகாவும் ஒருவகையில் காரணம் என்பதை, நாம் பெருந்தன்மையுடன் ஒத்துக்கொண்டுதான் ஆகவேண்டும்.

அவரின் காலத்தில் தமிழீழம் தோன்றுமா என்பதை தற்போதைக்குச் சொல்லிக்கொள்ள முடியாவிட்டாலும்... அதற்கான காரியங்களை சந்திரிகா தொடர்ச்சியாக செய்வள் போல்தான் தெரிகிறது.

நல்லது நடந்தால் நல்லதுதானே.

அன்புடன்..
ஆசிரியர்.

## தமிழீழத் தேசியக்கொடி

தமிழீழத் தேசியக்கொடியின் பயன்பாட்டு விதிமுறைகள் குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையால் வெளியிடப்பட்ட தேசியக்கொடி பயன்பாட்டு விதிக்கோவை என்ற சிறுநூலில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை, பகுதி பகுதியாக, இங்கு பிரசுரிக்கின்றோம்.




# தேசியக்கொடி

### தமிழீழத் தேசியக்கொடி

எமது தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களால் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கென உருவாக்கப்பட்டு, 1977ஆம் ஆண்டுமுதல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொடியாக இருந்து வரும் புலிக் கொடியிலுள்ள எழுத்துக்கள் நீக்கப்பட்டு, தமிழீழத்தின் தேசியக்கொடியாக தேசியத் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, 1990ஆம் ஆண்டு மாவீரர் நாள்முதல் தமிழீழத் தேசியக்கொடியாக அது இருந்து வருகின்றது.

முதல் தடவையாகத் தமிழீழத் தேசியக்கொடி எமது தேசியத் தலைவர் அவர்களால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களை நினைவுகூர்ந்த இரண்டாவது மாவீரர் நாளில் அவரது முகாமில் ஏற்றிவைக்கப்பட்டது.

### நிறங்களும் குறிக்கோளும்

எமது தேசியக்கொடியை மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை ஆகிய நான்கு நிறங்கள் அழகுபடுத்துகின்றன.

தனிப்பாங்கான தேசிய இனமான தமிழீழத் தேசிய இனம் தனது சொந்த மண்ணில் தன்னாட்சி அமைத்துக் கொள்ள விழைவது அடிப்படை அரசியல் உரிமை, மனித உரிமையாகும். தமிழீழ மக்கள் நடத்துகின்ற தேசிய விடுதலைப் போராட்டம் அறத்தின்பாற்பட்டது, நியாயமானது என்பதை மஞ்சள் நிறம் சுட்டி நிற்கின்றது.

14ம் பக்கத் தொடர்ச்சி

## அட இவ்வளவுதானா?

..ரமுக்கு அனுப்பமுடியாமல் போகுது..'

கனகசபை சிரத்தை இல்லாமல் ..ந்தப்பதிலை கேட்கும்போதே ..கோரிக்கு விளங்கி இருக்கவேண்டும் ..ப்பேச்சை இடைநிறுத்திக் கொண்டு.

'மிஸ்டர் கனகசபை கெதியாய் ..சால்லுங்கோ, நான் கொஞ்சநேரம் ..ரஸ்ட் எடுக்க

வேணும்' என்றான் சலிப்புத் தடவிய ..ரலுடன்.

மீசைமுறுக்கி முகம்பெருத்த நடுத்தரவயதுக்காரன் ஒருவன் கப்புக்களை மேசைகள்மீது லாவகமாக வைத்தபடி சென்றான்.

அதிகாரியின் கண் அசைவின்படி கனகசபைக்கும் ஒருகுப் கிடைத்தது. ஆட்கள் தரையில் வேர் விடத் தொடங்கிய கால்களை அசைக்க முடியாமல் பொறுமைகாத்தனர்.

◆ ◆ ◆

'என்ரை உயிரைத்தான் காணேல்ல..' பொன்னுப்பிள்ளை சொன்னாள்.

அதிகாரியின் மேசைமீது அவள் ..யிரின் முகம் ஒழிப்பிளம்பாகத் தகித்தது. ..தன் ஒளியில் அவள் விழிகள் துடித்தன. அவள் விழிகளை மூடிக்கொண்டாள்.

அவள் பதிலால் அதிகாரி பிசாசைக்கண்டவன் போலானான். தன் கீழ் கைகட்டி சேவகம் புரியும் ஒருவன் நெஞ்சு நிமித்தி கேள்விகேட்டால் எப்படி இருக்குமோ அப்பிடி அந்தரித்து கதிரையின் நுனிக்கு வந்தான்.

'ஏய் கிழவி, யாரைக் காணேல்லை'

'என்ரை உயிரைத்தான் காணேல்லை'

'என்ரை உயிரைத்தான் காணேல்லை' பொன்னுப்பிள்ளை எந்தவித வன்முறையாலும் வெளிப்படாதவாக்கு மூலமாக வெளிப்படுத்தினாள்.

சிறுபொழுது மௌனம் காத்த அதிகாரி தலைநிமிர்ந்தபோது அவன் முகம் வன்மத்தோடு உறுமத்தலைப்பட்டது. வாயின் கோடிகளில் வேட்டைப்பற்கள் வேட்கையுடன் வெளிக்கிளம்பின.

ஒரேபார்வையில் பொன்னுப்பிள்ளையை உதைத்தான். அந்த உதையால் அவள் வான் மண்டலத்திற்கு போயிருக்க வேண்டும். நல்லவேளை மண்டபக் கூரை மூன்றாம் தரப்பாக வந்துவிட்டது. தலையைத் தடவிக்கொண்ட அவளுக்கு அதிகாரியின் கோபம் புரிந்தது.

ஆனால், அதனை அவள் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. கோபப்படாத அதிகாரிகளை அவள் வாழ்க்கையில் எப்போதுதான் பார்த்திருக்கிறாள்.

அதிகாரி கசக்கி குப்பைக் கூடைக்குள் போடும் கழிவுத்தாளாக அவளைக் கழித்தான். எங்கேயோ போக வேண்டியது திசைமாறி வந்துவிட்டது என அர்த்தம் செய்துகொண்டு 'அடுத்த ஆள்' என்றபடி சிகரெட் ஒன்றினை வாயினால் கௌவி நெருப்புமூட்டி ஓலைக் குடிசைக்கு வைக்கப்பட்ட தீயாக பற்றிக் கொண்டு அது பின் அணைந்தது.

பொன்னுப்பிள்ளை அசைவில்லாமல் உறைந்து போய் நின்றாள். நேரம் நீண்டு கழிந்தது, 'அடுத்த ஆள்' மீண்டும் அதிகாரி,

பொன்னுப்பிள்ளை அதிகாரியை தீர்கத்துடன் பார்த்தாள். என்னை ஒதுக்கிவிட்டு அடுத்தவரை அழைப்பதன் காரணம் என்ன? என்ற தொனி அதில் இருந்தது.

'கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல முடியாத ஆட்கள் எல்லாம் ஏன் இங்கு வருகின்றீர்கள்' உறுமினான் அதிகாரி 'நீங்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லியாச்சு'

'என்ன'

'என்ரை உயிரைக் காணேல்லை'

'..............'

'அடுத்த ஆளை விடு'

சுட நின்றவர்கள் பொன்னுப்பிள்ளை பின்னால் நெருங்கி நின்றார்கள். அவர்கள் கருத்தொருமித்த செயற்பாடு அதில் புரிந்தது.

தீர்க்கமான முடிவுடன் பொன்னுப்பிள்ளை அதிகாரியைப் பார்த்தாள் பிறகு,

'என்ன முடிவு சொல்லுறியள்'

அதிகாரி முன்னால் மீண்டும் புயல் அடித்தது அவள் சீறிக்கொண்டு எழும்பினாள். கழுத்து நெரிபடுகையில் எழும் அடிக்குரலாக திரை தரையில் தேய்த்து சத்தம் போட்டது.

பொன்னுப்பிள்ளை சிரித்தாள், வரண்ட சிரிப்பு அதில் கேலிகள் பாளம் பாளமாய் வெடித்துப் பிரிந்தன.

அதிகாரிக்கு யாரோ கால்களை வாரிவிட்டதுபோல இருந்தது. பொன்னுப்பிள்ளை சிரித்த சிரிப்பு தன் முன்னால் விஸ்வரூபம் எடுத்து தன்னையே விழுங்கி விடுவது போன்ற உணர்வு ஏற்பட்டது.

அந்த இடத்தினைவிட்டு அக்கணமே மறைந்துவிட வேண்டும் என்ற எண்ணம் உந்தித் தள்ளியது. ஓடுதளத்தில் ஓடிக்கிளம்பத் தேவையில்லாத ஹெலிகொப்டர் ஒன்று வந்தால் நல்ல.. போலவும் பட்டது.

அவனது மேசையைச் சுற்றி ஆட்.. சந்தை மீன் வியாபாரியைச் சுற்றி நிற்பவர்களைப்போல அவனையே பார்த்துக் கொண்டு,

விரைவாக நகரமுடியவில்லை.. பரிதாபமாக அல்லாட முனைந்.. அதிகாரிக்கு உதவ வந்தவர் க.. ஆட்களை விலத்தி அதிகாரி வெளியேற்றுவதற்கு இடையி.. களைத்துவிட்டார்.




**2.11.99**
ஓயாத அலைகள் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. வன்னிப் பெருநிலப்பரப்பில் ஒட்டிசுட்டான் நெடுங்கேணி முகாம்கள் கைப்பற்றப்பட்டன.

**3.11.99**
ஒலுமடு, கரிப்பட்டமுறிப்பு ஆகிய பிரதேசங்கள் மீட்கப்பட்டன.

**6.11.99**
புளியங்குளம், கனகராயன்குளம் ஆகிய இரு பலமான தளங்கள் கைப்பற்றப்பட்டன
ழன்றுமுறிப்பு, மேற்கு மாங்குளம், நயினாமடு, மதியாமடு ஆகிய பிரதேசங்கள்
.கப்பட்டன.

**-99**
ாற்றுப் பகுதியில் தனிக்கல், சிலோன்தியேட்டர் முகாம்கள் உட்பட 5பாரிய
ள் தாக்கியழிக்கப்பட்டன.

பள்ளமடு, பெரியமடு, தட்சணாமருதமடு, மடுத்திருப்பதி, மடு றோட் ஆகிய
லிருந்த இராணுவ முகாம்கள் மினிமுகாம்கள் தொடர்க்காவலரண்கள்
ற்றியழிக்கப்பட்டன.
ணைஇலுப்பைக்குள இராணுவ முகாமும் கைப்பற்றப்பட்டது.

ற்படைமுகாம், கட்டைக்காடு புல்லாவெளி இராணுவ முகாம்கள்
.ன.

வற்குழி, சாவகச்சேரி, கொடிகாமம், இயக்கச்சி ஆகிய
த படைமுகாம்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல்கள்

ததியிலுள்ள முக்கியத்துவமிக்க மருதங்கேணி
கொண்டுவரப்பட்டது

**17-12-99**
பரந்தன் இராணுவ முகாம் 23 மணிநேரச் சமரின் பின்னர் கைப்பற்றப்பட்டது. அதே வேளை கேரதீவு, சங்குப்பிட்டி, அறுகுவெளி முகாம்கள் கைப்பற்றப்பட்டன.

**21-12-99**
பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை முகாமும், கோரக்கன்கட்டுக்குளம் ஆகிய இரு முகாம்கள் வீழ்த்தப்பட்டுள்ளன.

**27-12-99**
உமையாள்புர முகாம் தகர்க்கப்பட்டது.

**29-3-00**
தாளையடி, செம்பியன்பற்று ஆகிய பிரதேசங்களில் இருந்த இராணுவத்தினர் விரட்டியடிக்கப்பட்டனர். பளையிலிருந்து ஆட்லறித்தளம் தகர்க்கப்பட்டது.

**03.04.00**
பளைக்கும் எழுதுமட்டுவாளுக்கும் இடைப்பட்ட A-9 நெடுஞ்சாலையின் 6 கி.மீ பகுதி பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது. இத்தாவில் முகமாலைப்பகுதிகள் மீட்கப்பட்டன.

**23-4.00**
வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஆனையிறவுப் பெருந்தளமும், பிரதேசமும் மீட்கப்பட்டது.

**30-4-00**
பளை நகரம் மீட்கப்பட்டது.

**10-5-00**
நாவற்குழி, அரியாலை கொழும்புத்துறைப் பகுதிகள் கைப்பற்றப்பட்டன. தென்மராட்சியில் கோயிலாக்கணடி, தனங்கிளப்பு ஆகிய இருதளங்கள் கைப்பற்றப்பட்டன.

**11-05-00**
பாசையூர், மணியந்தோட்டம்,முதலான பகுதிகள் கைப்பற்றப்பட்டு யாழ் கச்சேரியை அண்மித்து புலிகளின் படையணிகள் நிலைகொண்டுள்ளன.